REGISTERED No. M. 6165. ந. பை. 13

பத்ஹுல் இஸ்லாம்

FATH-HUL-ISLAM

மாதப் பத்திரிகை.

ஜூன்—1962.

விஷயம்.	பக்கம்.
'ரூஹு' என்னும் அந்தராத்மா	1
திருக் குர்ஆன் சாரசங்கிரஹம் (ரஹ்மத் பாகவி)	9
ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் ஜீவிய சரிதை (டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் பாகவி)	13
புது வாழ்வு (ஓர் கற்பனை காவல்) (எம். எம். தீன்.)	21
மறந்தோம் (அ. அப்துல் வஹ்ஹாப்) ...	28
எட்டிக்குப் போட்டி (சிறுவர் பகுதி) டி. எப். ஆர். மஆலி ஸாஹிப் (பாகவி) ...	29

...இஸ்லாம் ஆபீஸ்:
...ரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

பத்ஹுல் இஸ்லாம்

சந்தா விபரம் : இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

வருஷ சந்தா	ரூ.	1–50
தனிப் பிரதி நயா பைஸா		0–13
மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா	ரூ.	2–00

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

புதிய இரண்டாம் பதிப்பு

நபி நாயகத்தின் ஜீவிய சரித்திரம்

(சீருவசனம்)

இச்சரிதை நமது நாயகம் முஹம்மது முஸ்தபா றஸூலுல்லா ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரையில் நிகழ்ந்துள்ள விஷயங்கள் யாவும் ஒன்று சேர்த்து அச்சிடப்பட்டது. இது டிம்மி 1-8 பேஜ் ஸைஸில் 1008-பக்கங்களில் பதிப்பித்து இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

விலை ரூ. 8–00

கிடைக்குமிடம்:—
ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதருஸ் 5.

الإسلام

பத்ஹுல் இஸ்லாம்

ஜுன்—1962.

'ரூஹு' என்னும் அந்தராத்மா.

"வயஸ் அலூனக அளிர்ரூஹி; ருலிர்ரூஹு மின் அம்ரி ரப்பீ; வமா ஊதீதும் இல்லா கலீலா......"

இது குர்ஆன் ஷரீபிலுள்ள ஓர் ஆயத்தின் தமிழ் உச்சரிப்பு. இதன் பொருள்:—

"நபியே, உம்மிடம் அவர்கள் (வந்து) ரூஹ் என்பது என்ன? என்று (கேள்வி) கேட்கிறார்கள். அதற்கு நீர் (இவ்வாறு பதில்) சொல்வீராக: ரூஹானது என்னுடைய இரக்ஷகனின் கட்டளையைச் சார்ந்ததாகும்; அதைப்பற்றி ஞானம், மிகச் சொற்பமாகவே (பொது மக்களுக்கு) அளிக்கப்பட்டிருக்கிறது" என்பதாகும்.

ரூஹ் என்றால் உயிர் என்று பொதுவாக அறிந்து கொள்கிறோம். பிரபஞ்சத்திலுள்ள கோடானுகோடி ஜீவ ஜந்துக்களுக்கும் உயிர் உண்டு. உயிர் உள்ள பிராணிகள் யாவும் ஜீவன் எனப்படுகிறது. எறும்பு முதல் யானை வரை, அதைவிடப் பெரிதாய் ஆழ்க்கடலில் வாழும் பெரிய திமிங்கலம் வரை யாவற்றிற்கும் உயிர் என்னும் ஜீவன் உண்டு.

ஒரு ஜீவனுக்கு உயிர் உண்டு என்பதை அதன் செயல்—அசைவு—ஸ்பரிசம் முதலிய உணர்ச்சிகளைக் கொண்டு நாம் அறிந்து

கொள்கிறோம். ஒரு ஜீவன் அசையாமல் இருந்தாலும், அதற்கு அசையும் சக்தி, சுவாசிக்கும் தன்மை உண்டென்பதைக் கொண்டு அதற்கு உயிர் என்னும் ஜீவன் உண்டென்பதைத் தெரிந்து கொள்கிறோம். பாறைக் கல்லைப் பிளந்தால் அதற்குள்ளிருந்து 'தேரை' என்னும் ஒரு ஜந்து வெளியே குதித்து ஓடி வருகிறது. அது அப்பாறைக்குள் சந்து பொந்து இல்லாமல் இயற்கை சக்தியால் அடைபட்டுக் கிடந்தது. அதற்குள் அது எப்படி சுவாசித்துக் கொண்டிருந்தது; எதை உண்டு வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது என்பது சாதாரண அறிவுக்குப் புலப்படுவதில்லை.

இதேமாதிரி, வெளிப்படையில் பிரத்தியக்ஷமாய்த் தெரியவாராத எத்தனையோ சிருஷ்டிகள் உயிர் உள்ளனவாய் இருக்கின்றன. அவற்றில் அசையும் தன்மையுள்ள சேதனப்பொருள்களும் உண்டு, அசையும் தன்மையற்றதான அசேதனப் பொருட்களும் உண்டு.

உயிர் உள்ள பொருள் எல்லாம் இயற்கை நியதியின்படி வளர்ச்சி யடைந்து கொண்டுதான் இருக்கின்றன. மரம், செடி; கொடிகளுக்கு உயிர் உண்டா? என்று பன்னெடுங்காலமான தாவர வர்க்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கொண்டுதான் இருக்கின்றனர். மரஞ் செடி கொடிகளுக்கும் உயிர் என்னும் ஜீவன் உண்டு; அவைகளும் காற்றை சுவாசிக்கின்றன; தண்ணீரைக் குடிக்கின்றன; பூசாரம் என்னும் பூமி சத்தை மண்ணிலிருந்து கிரஹித்து உண்டு ஜீவிக்கின்றன: ஆனால் அவை ஒரே இடத்தில் ஸ்திரமாய் இருந்து தான் ஜீவிக்க முடியும் என்று முடிவு கட்டுகின்றனர் இயற்கை விஞ்ஞானிகள்.

எறும்பு, புழு, பூச்சிகள் பகிரங்கமாக அசைந்து ஊர்ந்து சென்றலைந்து உயிர் வாழ்ந்து கொண்டிருப்பதை நாம் பிரத்தியக்ஷமாய் காணுகின்றோம். ஆகவே ஒரு சிறு எறும்பும், இயற்கை தரும் நியதியின்படி பிறந்து ஊர்ந்து வளர்ந்து மூப்படைந்து இயற்கை விதிப்படி இறந்து போகின்றது. யானையும் தான் சிறு குட்டியா யிருந்து காளைப்பருவம் எய்தி பிறகு மூப்படைந்து தளர்ந்து சாய்ந்து இறந்து போய் விடுகிறது. எனவே, எறும்பு முதல் யானைவரை எல்லா ஜீவன்களும் பூமியில் ஊர்ந்து ஆகாயக் காற்றை சுவாசித்து, மழையின் ஈரத்தை உறிஞ்சி, வெய்யிலின்

187089

உஷ்ணத்தை கிரகித்து, ஆகாரத்தை உண்டு நீரைப்பருகி உயிர் வாழுகின்றன.

ஒரு ஜீவனுக்கு உயிர் உண்டு என்பதை நாம் அதன் அறிவுகளை (அசைவுகளை உணர்ச்சிகளைச்) கொண்டு அறிந்து கொள்கிறோம். பொதுவாக, அறிவுகள் ஐந்து வகையாக வகுக்கப்பட்டிருக்கின்றன. அவை ஐயறிவு என்று சொல்லப்படுகிறது. (1) பார்க்கும் சக்தி (2) கேட்கும் சக்தி (3) சுவைக்கும் சக்தி (4) தொட்டறியும் சக்தி (5) முகர்ந்து அறியும் சக்தி என்று தெரிந்து கொள்கிறோம். இவ்வைந்து சக்திகளில் எது முதன்மையானது என்பது அதன் முக்கியத்துவத்தைப் பொருத்ததாகும்.

உயிர் வாழ்வுக்கு இந்த ஐந்து சக்திகளும் அத்தியாவசியமாகும். ஐயறிவில் ஒன்றிரண்டு இல்லாதொழியினும் ஜீவப் பிராணி உயிர் வாழ முடியும். ஆனல் இந்த வாழ்வு பரிபூரண பயனுடையதாய் இராது. ஐயறிவு பரிபூரணமாய் இருந்தால்தான் எந்த ஜீவனும் உயிர் வாழ முடியும். இவ்வை வகை அறிவு (உணர்ச்சி) களில் ஒன்று இழந்தாலும் அந்த ஜீவன் பழுது உடையதாய் குருடு, செவிடு, மந்தம், முடம் என்று இழிமொழியால் அழைக்கப்படும்.

இவ்வைந்து வகை சக்தி (குவ்வத்து)களுக்கு மேற்பட்டதாய் ஆருவது ஓர் அறிவும் உண்டு. அதை "பகுத்தறிவு" என்று சொல்லுகின்றோம். இந்த பகுத்தறிவு என்னும் 'அக்லு' சிருஷ்டிப் பொருட்களிலெல்லாம், ஜீவப்பிராணிகளி லெல்லாம் சிறப்புடையதான சிரேஷ்டமான மனிதனுக்கு மட்டுமே உரியதாகும். எனவே, மனிதப் பிராணியை நாம் "அஷ்ரபுல் மக்லூகாத்" என்று சிறப்பித்துக் கூறுகின்றோம். மனிதனுக்கு மட்டும்தான் "அக்லே ஸலீம்" என்னும் பகுத்தறியும் சக்தியுண்டு.

மனிதன் பகுத்தறியும் சக்தியைக் கொண்டு தன்னைத்தான் உணர்ந்து அறிகிருன்; தன்னைப்படைத்த இறைவனை உணர்ந்து கொள்கிருன். தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பையும் சம்பந்தத்தையும் ஆராய்ந்து அறிந்து கொள்கிருன். இறைவனின் இன்னருளால், இயற்கை சக்தியின் பிரகாரம் தன்னுள் அடைந்திருக்கும் மகா சக்திகளை (குவ்வத்துகளை) வெளிப்படுத்தி, இப்பிரபஞ்சத்தில் மற்றெந்த ஜீவ ஜந்துப் பிராணிகளும் சாதிக்க முடியாத அபாரமான காரியங்களைச் சாதித்துக் கொள்கிருன்.

ஜீவஜந்துப் பிராணிகள் தரையில் ஊர்ந்து செல்கின்றன; அல்லது 4 கால்களால் நடந்து செல்கின்றன, அல்லது இரண்டு கால்களும் இறக்கைகளும் கொண்டு ஊர்ந்தும் பறந்தும் செல்கின்றன. ஜீவஜந்துப் பிராணிகளில் பெரும்பாலானவை முற்றும் எல்லாம் பூமியில் படுத்தும், பணிந்தும், குனிந்துமே சென்று இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனால் சிருஷ்டிகளில் சிரேஷ்டனான (அஷ்ரபுல் மக்லூக் ஆன) மனிதன் மட்டும்தான் மற்றப் பிராணிகளைப் போல் ஊர்ந்தும், பணிந்தும், குனிந்தும் இயங்கிச் செல்லும் சக்தியோடு இருகால்களால் நெடுக நின்று தடுமாற்றமின்றி நடக்கவும், ஓடவும், பாயவும் பிரதானமான சக்தியுடையவனாக இருக்கின்றான்.

இருகால்களால் நெடுக நின்று நடக்கும் நூதன சக்தியுடைய மாந்தன் மற்றெல்லா ஜீவஜந்துப் பிராணிகளுக்கு மேலானவனாகவும், மற்றதையெல்லாம் அடக்கி யாளக்கூடியவனாகவும் இருக்கின்றான். மனிதன், உருவத்தில் யானையைவிட பலத்தில் சிறியவன்தான்; சிங்கத்தைவிட வீரத்தில் சிறியவன்தான், குதிரையைவிட வேகத்தில் சிறியவன்தான், எனினும் யானையையும் சிங்கத்தையும், குதிரையையும் அடக்கி ஆளக்கூடிய தன்மை—தைரியம் பலம் பராக்கிரமம் யாவும் ஒருங்கே, மனிதனுடைய தன்மையில் அபூர்வமாய் அமைந்திருக்கின்றன. ஆகவே மனிதன் சிருஷ்டிகளிலே சிரேஷ்டமான 'அஷ்ரபுல் மக்லூகாத்' ஆக இருப்பதோடு பூலோகத்தில் இறைவனின் பிரதிநிதியான 'கலீபாவாக'வும் அமைந்திருக்கின்றான்.

எறும்பு முதல் யானைவரை சகல ஜீவ ஜந்துக்களைப் படைத்துக் காத்து அழிக்கும் அபார சக்தியுடையவன் இறைவன் என்னும் அல்லாஹுதஆலாவேயாவன். அவனை மனிதன் தான் உணர்ந்து கொள்ளக்கூடிய மெஞ்ஞானம் உடையவனாக இருக்கின்றான். இறைவனின் தன்மை என்னும் 'ஸிபாத்கள்' என்னென்ன வென்பதை இன்ஸானாகிய மனிதன்தான் உணர்ந்து அறிகின்றான். சில விஷயங்களில் மனிதன் அல்லாஹுதஆலாவுடைய 'கலீபா' (பிரதிநிதி) என்ற முறையில் இறைவனுக்குரிய சில குணம்சங்களையும் உடையவனாக இருக்கின்றான். இயற்கைப்படி சிருஷ்டிக்கும் சக்தி இறைவனுக்குடையதாயினும், செயற்கைப்படி சிருஷ்டிக்கும்

சக்தி மனிதன் உடையவனாக இருக்கின்றான். இயற்கைப்படி காக்கும் சக்தி அழிக்கும் சக்தி இறைவனுக்கே உரியதாயினும் செயற்கைப்படி காக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் ஒருவகையில் மனிதனுக்கும் உரியதாகவும் அமைந்திருக்கின்றன.

அஷ்ரபுல் மக்லூகாகிய இன்ஸான் உலகத்தில் பற்பல அற்புதமான காரியங்களைச் சாதித்துச் செய்து காட்டிக் கொண்டிருக்கிறான். கடல் மீது செல்ல கப்பலை உண்டாக்குகிறான்; ஆகாயத்திலே பறந்து செல்ல விமானத்தை உண்டாக்குகிறான்; வானுற ஓங்கி நிற்கும் 100 அடுக்கு மாளிகைகளைக் கட்டி முடிக்கின்றான்; உயரமான ஸ்தூபிகளையுடைய மஸ்ஜிதுகளையும் கோபுரங்களையும் உண்டாக்கி வைக்கின்றான். காட்டை நாடாக்குகிறான், நாட்டை காடாக்குகிறான்; மேட்டை பள்ளமாக்குகிறான்; பள்ளத்தை மேடாக்குகிறான்; இன்னும் என்னென்னத்தையோ இன்ஸானாகிறவன் உண்டாக்கி இறைவனுடைய மகா சக்தியோடு போட்டி போட்டுக் கொண்டுதான இருக்கின்றான். ஆனால் இறுதியில் அவனுக்குக் கட்டுப்பட்டிராமல் மேலோங்கி நின்று அவனை இயங்க வைத்துக் கொண்டிருக்கும் மகா சக்தியின் அசைவுக்குப் பணிந்து தஞ்சமடைந்து, தளர்ந்து, உணர்விழந்து, உயிர் இழந்து, செயல் அற்றுச் செத்துப் போய் விடுகின்றான்.

"குல்லுமன் அலைஹா பான்; வயப்கா வஜ்ஹு ரப்பிக, துல்ஜாலி வல் இக்ராம்"

(பிரபஞ்சத்தின் மீதிருக்கும் அனைத்தும் அழிந்து ஒழிந்து போய்விடக் கூடியவைதான். \ஆகவே, மகா சிறப்பும் மகிமையும் உடைய அல்லாஹு த.ஆலாவுடைய உள்ளமை மட்டும்தான் சாஸ்வதமாக நீடித்து நிலைத்து இருப்பதாகும்) (குர்ஆன் மொழி)

இறைவனாகிய சிருஷ்டிகர்த்தா அழிவில்லாதவன்; எப்போதுமிருப்பவன்; தாயும் காயிமாக இருப்பவன்; ஆனால் உலகில் அவனுடைய பிரதிநிதியாக விளங்கும் இன்ஸான் அழிந்து போகிறவன்; மரித்துப் போகிறவன்; உண்டானதைப்போல் இல்லாமற் போய் விடுபவன். எனவே மனிதனானவன், இறைவனைப்போல் பல வகை காரியங்களைச் சாதிக்கும் தன்மை யுடையவனாக இருப்பினும் 'மவுத்து' என்னும் மரணத்தை வெல்லும் சக்தி மனிதனுக்குக் கிடையாது.

எல்லாப் பிராணிகளைப்போலவே தான் மனிதனும் மவுத்து என்னும் மரணப்பிடிக்குள் அகப்பட்டுச் செத்துப் போய் விடுகிறான். மவுத்து—மரணம்—சாதல் என்பது என்னவென்று மனிதன் அக்காலம் தொட்டு இக்காலம்வரை ஆராய்ந்து பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றான். ஆனால் மரணம் என்பதை அவனால் அடக்கியாள முடியவில்லை. அதாவது தன் சரீரத்தை இயங்க வைக்கும் அபூர்வ சக்தியாகிய உயிரை—ரூஹை—ஜீவனை அவனால் கட்டுப்படுத்தி, பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள முடியவில்லை.

உடற்கூற்று ஆராய்ச்சியிலும் மனிதன் அபார ஆராய்ச்சியும் ஞானமும் உடையவனாகத்தான் இருக்கின்றான். இக்கால நவீன சத்ர கிகிச்சை முறையில் டாக்டர் என்னும் வைத்தியர்கள் எம்மட்டோ முன்னேற்றமடைந்து விட்டார்கள். உடலைக் கீறி உள்ளே இருக்கும் அவயவங்களைப் பழுது பார்த்து சீர் செய்து சௌக்கியப் படுத்துவது இக்காலை ஆஸ்பத்திரிகளில் சர்வ சாதாரணமாக நடை பெற்று வருகிறது அத்துடன் அந்த டாக்டர்கள் மனித சரீரத்தில் மிக நுணுக்கமான பாகங்களாகிய மண்டை யோட்டு மூளையையும், இடது நெஞ்சுப்பக்கத்துள்ள கடிகாரம்போல் ஓயாமல் இயங்கிக் கொண்டிருக்கும் இருதயக்கமலத்தைக் குறிப் பார்த்து சிகிச்சை செய்து வருகிறார்கள். அங்ஙனம் அபூர்வ முறையில் ஹிருதயத்தை சிகிச்சை செய்யும் டாக்டரே, திடீரென ஹிருதய ஓட்டம் நின்று (ஹார்ட் பெய்லாகி) இறந்துபோய் விடுகிறார். அவருக்கு இந்த மரணச் சம்பவம் நேரிடுமென்பதை அவரால் கூட முன்னறிவிப்பாகத் தெரிந்து கொள்ள முடிவதில்லை.

இங்ஙனம் மனிதன், தன்னையுமறியாமலும், தானும் எதிர்பாராமல் செயலற்று செத்துப்போவதை நாம் 'மவுத்து' என்கின்றோம். அவன் ஜீவித்துச் செயல் புரிவதை 'ஹயாத்' என்கின்றோம். அல்லாஹுதஆலா, ஹயாத்தையும் மவுத்தையும் மட்டும் தன் ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டு மற்ற குத்ரத்துகளை (சக்திகளை) அஷ்ரபுல் மக்லூகாகிய இன்ஸானுக்குக் கொடுத்து அருள் புரிந்திருக்கின்றான்.

இங்ஙனம் மனிதன் படுத்த படுக்கையிலும் நின்ற நிலையிலும் செத்துச் செயலற்றுப் போய் விடுகிறானே அப்போது அவனுடைய

உடலிலிருந்து வெளிப்பட்டுப் போய் விடும் அபூர்வ சக்தி என்ன? அதுதான் ரூஹ் என்பதாம்.

மவுத்தாகும் மனிதனுடைய உடலிலிருந்து 'ரூஹ்' என்னும் ஆத்மா, அந்தராத்மா, உயிர், ஜீவன், ஹயாத் வெளிப்பட்டுப் போய், அது போய்ச்சேர வேண்டிய இடத்தில் இறைவனின் ஆதிக்கத்தில் போய்ச் சேர்ந்து விடுகிறது. இது இறைவனின் இஷ்டத்தில் உள்ள ஓர் அம்சம். இது 'அம்ருல்லாஹ்' (அல்லாஹ்வின் காரியம் கட்டளை—ஆக்ஞை)யாகும். இதைப்பற்றி, மாந்தன் என்னதான் ஆராய்ந்து, உணர்ந்து, ஆழ்ந்து பார்த்தாலும் ரூஹுடைய ஹகீகத்தைக் கண்டறிய முடிவதில்லை.

ஆனால் ஆத்ம ஞானிகள் அல்லாஹ்வின் 'குர்பை' யடைந்த மேலோர்கள் இதை அறிவார்கள்; ஆனால் வெளிப்படுத்திச் சொல்ல இசையார்கள் இயலார்கள். இதுதான் ரூஹுடையவும், அல்லாஹ்வுடையவும் தன்மையாகும். இதன் உண்மையைக் கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர் வல்லாஹு அஃலம்.

நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு
அலைஹி வஸல்லம் அவர்களின்
அருமை புதல்வியாகிய

பாத்திமா நாயகி (ரலி) ஜீவிய சரித்திரம்

இச்சரித்திரத்தில் ஹஜரத் பாத்திமா நாயகி அவர்களின் மாதாவாகிய உம்முல் மூஃமினீன் கதீஜா நாயகி அவர்களின் வம்ச பரம்பரையும், அவர்களின் பிறப்பும், பாத்திமா நாயகியின் பிறப்பும, பால்யகால அறிவும், பரஸ்பர அன்பும், நாயகியின திருக்கலியாணமும், அவர் தம் வீட்டில் குடித்தனம் நடத்தி வந்த ஒழுங்கும், தனது பர்த்தாவாகிய அலியாருக்கு இணங்கி நடந்த அழகும், அவர்களின் தயாள சிந்தையும், உழைப்பும், ஆண்டவன் மீது பக்தியும், வணக்கமும், கபூலாக்கப்பட்ட துஆவும், ரஸூலுல்லாவுக்கு பாத்திமா நாயகியின் பால் இருந்து வந்த அன்பும், நாயகிக்கு தம் தந்தையின் பால் இருந்து வந்த பிரியமும் அவர்களின் நாணம், அடக்கம், அச்சம் முதலிய ஒழுக்கங்களும், இமாம் ஹஸன் ஹுஸைன் றலியல்லாஹு அன்ஹுமா அவர்களின் மேம்பாடும், நாயகியின் வபாத்தும் விபரமாய்க் கூறப்பட்டிருப்பதுடன் இந்நாயகியின் ஜீவிய சரித்திரத்தில் நம் சகோதர சகோதரி களுக்கு அரிய போதனைகளும் அடங்கி யிருக்கின்றன. ஒவ் வொரு முஸ்லிமும் இச்சரிதையை வாசித்துணர வேண்டி யது மிக்க அவசியமாகும்.

கிளேஸ் காகிதம் இதன் விலை ரூ. 1–60
ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 3–00

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

திருக் குர்ஆன் : : : :

: : : : சார சங்கிரஹம்

பல விஷயங்கள் பற்றிய பல ஆயத்துகள்.

(ரஹ்மத் பாகவி)

முஸ்லிம்களெல்லோரும் சகோதரர்களாவர்

ஈமான் கொண்டவர்(களான முஸ்லிம்)கள் எல்லோரும் உற்ற சகோதரர்களாவர். எனவே, இரண்டு (முஸ்லிம்) சகோதரர்களுக்கிடையில் ஏதேனும் சச்சரவு ஏற்பட்டு விட்டால், (நடு நிலைவகிப்பவர்களான) நீங்கள் அவ்விரு சகோதரர்களுக்கிடையில் (சமாதானப்படுத்தி) இணக்கத்தை உண்டாக்கி வையுங்கள் இன்னும் அல்லாஹ்வுடைய வேதனைக்குப் பயப்பட்டுக் கொண்டிருங்கள். அங்ஙனமாயின், அல்லாஹ்வும் உங்கள் மீது கருணை புரிவான்.

(ஜுஸ்வு: ஹாமீம்; ஸூரா: ஹுஜ்ராத்; ருகூ: 1)

முஸ்லிம் என்றால் யார்?

முஸ்லிம் (மூமின்) என்றால் யாரெனில்: அவர் அல்லாஹ்வின் மீதும், ரஸூலின் மீதும் (நன்னம்பிக்கை என்னும்) ஈமான் கொண்டிருப்பார். அவ்விஷயங்களில் எந்தவிதமான சந்தேகமும் கொள்ள மாட்டார். இன்னும் எவர் அல்லாஹ் ரஸூலின் பாதையில் சன்மார்க்கத்துக்காக தன்னுடைய பொருளையும் உயிரையும் (தத்தம் செய்து) செலவு புரிகின்றாரோ அவரே (உண்மையான) முஸ்லிம் (மூமின்) ஆவார்.

(ஜுஸ்வு: ஹாமீம்; ஸூரா: ஹுஜ்ராத்; ருகூ: 2)

மரண காலக் கஷ்டம் வந்தே தீரும்

மரணகாலக் கஷ்டம் (ஸக்ராத் மயக்கம்) (எல்லோருக்கும்) வந்தே தீரும் அப்போது (இறைவனாகிய) நாம், (மனிதனை நோக்கி 'இப்படிப்பட்ட மரணகாலச் சம்பவம்) வராதென்று மமதை கொண்டு திரிந்தாயே அந்தக்கஷ்டமே இப்போது வந்திருப்பது' என்று எடுத்துரைப்போம். அதன்பின், (கியாமத்து நாளுக்குரிய) ஸூர் ஊதப்படும். அப்போது நாம் (மனிதர்களை நோக்கி) உங்களை எச்சரிக்கை செய்து கொண்டிருந்தோமே அந்த நாள் இதுதான் என்று சொல்லுவோம்.

(ஜுஸ்வு: ஹாமீம்; ஸூரா காப்; ருகூ: 2)

நல்லடியார்களுக்கு சுவர்க்கத்தில் கிடைக்கும் இன்பங்கள்

(அல்லாஹ்வுக்கு) நெருங்கியவர்களான நல்லடியார்களுக்கு, (சுவர்க்கலோகத்தில்) குளிர்ச்சியான உத்தியான வனத்தில் சௌகர்யமான வசதிகள் அளிக்கப்படும். இவர்கள் பலர் முன்னர் வந்தவர்களும், இன்னும் பலர் பின்னர் வந்தவர்களும் (அவரவர்களின் அந்தஸ்துகளில்) இருப்பார்கள். அவர்கள் அலங்காரமான கட்டில்களில் எதிரெதிராக (ஆசனம் அமைந்து சாய்ந்து சுகமாக) உட்கார்ந்திருப்பார்கள். அப்போது அழகான இளவயதுச் சிறுவர்கள் (பணிவிடை புரிவதற்காக) கைகளில் இனிய பானமுள்ள கூஜாவும், தட்டங்களும் ஏந்திக் கொண்டு வருவார்கள். அவர்கள் இனிய மதுவின் கோப்பை ஏந்திக் கொண்டு சுற்றி சுற்றி வந்து (கொடுத்துக்) கொண்டு இருப்பார்கள். அந்த இனிய மதுவை உண்பது கொண்டு மயக்கமோ (போதையோ) (சிரமமோ) சிறிதும் ஏற்பட மாட்டாது. வீணான வார்த்தைகளையும் (உளறிப்) பேசமாட்டார்கள். அவர்கள், எந்தவிதமான கனிவர்க்கத்தை விரும்பிய போதிலும் எந்தவிதமான பட்சிகளின் மாமிசத்தை விரும்பிய போதிலும் அவை (தயாராகிப் பக்குவமாக) அவர்கள் எதிரில் வந்து இருக்கும். இவையல்லாமல் (பெரிய பெரிய) கருவிழிகளுள்ள அப்சரா (ஹூருல் ஈன் என்னும்) இளமங்கையரும் (அங்கு தயாராக) இருப்பார்கள். (இம்மங்கையர்) பத்திரமாக பாதுகாத்து வைக்கப்பட்ட (புத்தப்பதுக்களைப் போல் இருப்பார்கள்) இவையெல்லாம் (அந்தப் பாக்கியசாலிகள்) உலகில் புரிந்த நல்அமல்களுக்குப் பிரதிப்பலனாக அளிக்கப்படும். அந்த சுவன வாழ்வில் (இரைச்சல் இராது); ஆபாச பேச்சுகள் காதில் விழாது; அறுவறுப்பு இராது; எங்கள் ஸலாம்—ஸலாம் என்ற சாந்த மொழியே நிலவி யிருக்கும்.

(ஜுஸ்உ: காலபமா கத்புகும்; ஸூரா: வாகிய; ருகூ: 1)

எல்லாச் சம்பவமும் அல்லாஹ்வின் கட்டளைப்படியே ஆகின்றன

ஜனங்களே உலக வாழ்வில், உங்கள் மீது நேரிடும் கஷ்டங்கள் (சோதனைகள்) எல்லாம் அவை உங்கள் மீது நேரிடும் போது அல்லாஹுத் தஆலா ஏற்கெனவே உங்களுக்குக் கற்பனை செய்த பிரகாரமே நிகழ்பெறுகின்றன. (இறைவனுகிய) நாம் அவைகளை லவ்ஹே மஹ்பூலில் (பாதுகாக்கப்பட்ட புனித ஏட்டில்) அவை எழுதி வைக்கப்படாமலில்லை. இக்காரியம் அல்லாஹுத் தஆல

வுக்கு மிக இலேசானதேயாகும். இவ்விஷயம் (இங்ஙனம் ஸ்பஷ்டமாக) எதற்காக எடுத்துரைக்கப்படுகிற தென்றால், ஒரு துன்பம் நேரிட்டு உங்கள் கைப்பொருள் (கையை விட்டுத்) தவறிப்போனால் அதற்காக வருத்தப்படாமல் இருக்கவேண்டும் என்பதற்கேயாகும். இதேமாதிரி அல்லாஹு தஆலா உங்களுக்கு (அபார) செல்வத்தை (பாக்கியத்தை) அளித்து விட்டால், அதனைக்கொண்டு மமதை(யும் தற்பெருமையும்) கொள்ள வேண்டாம். (கஷ்டத்தின் போதும் சரி சௌக்கியத்தின் போதும் சரி, எப்போதும் எல்லாம் அல்லாஹு தஆலாவின் கற்பனையின் பிரகாரமும் நம்முடைய பாக்கிய வசத்தின் பிரகாரமுமே நடைபெறுகின்றன என்று எண்ணித் திருப்தியுற வேண்டும்.)

(ஜுஸு: காலபமா கத்புகும்; ஸூரா: ஹதீது; ருகூ: 1)

சபைகளின் மரியாதை ஒழுக்கங்கள்

முஸ்லிம்களே, சபைகளில் (புனிதமான கூட்டங்களின் வஃலு உபதேசம் நடக்கும் மஜ்லிஸ்களில்) எல்லோரும் சேர்ந்து அமருங்கள் என்று சொன்னால் அப்படியே பரவி வியாபித்து உட்காருங்கள். அல்லாஹு தஆலாவும் (உங்களுக்கு வாழ்க்கையில்) வசதியைத் தந்தருள்வான். இன்னும் அச்சபையில் (இடவசதி நிர்வாகம், நிகழ்ச்சிகளை யொட்டி) எழுந்து நில்லுங்கள் என்று (உங்களில் யாருக்கேனும்) சொன்னால் அப்படியே எழுந்து (ஒதுங்கி) நில்லுங்கள். (இதை உங்களுக்கு நேர்ந்த அவமானம் என்றோ, கௌரவக்குறைவு என்றோ) எண்ணாதீர்கள். ஜனங்களில் யார் ஈமான் உடையவர்களாகவும் நேர்மை ஞானம் உடையவர்களாகவும் (ஒழுக்கம் மரியாதைகள் தெரிந்தவர்களாகவும்) இருக்கிறார்களோ, அவர்களுடைய அந்தஸ்தை அல்லாஹு தஆலாவும் உயர்த்தி (உன்னதமாக்கி) வைக்கின்றான். (சபைகள், மஜ்லிஸ், கூட்டங்களில் ஒழுங்குமுறைகளைப் பேணி, இங்கிதமாக நடந்து கொள்ள வேண்டுமென்றும் அவர்களுக்கு அல்லாஹு தஆலா கண்ணியம் அளிப்பான் என்றும் இவ்வாயத்து போதிக்கிறது.)

(ஜுஸு: கத்ஸமி அல்லாஹ்; ஸூரா: முஜாதிலா; ருகூ: 2)

சொத்தும் செல்வமும் மக்களும் உங்களை ஆசையால் கெடுத்துவிட வேண்டாம்

(முஸ்லிம்களே) ஈமான் கொண்டவர்களே, (நீங்கள் சேமிக்கும்) செல்வமும் (பெற்று வளர்க்கும்) பிள்ளைகளும் மற்றும் சுக போக சாதனங்களும் உங்களை அல்லாஹு (தஆலா)வுடைய

(தொழுகை, வணக்கம் முதலிய) தியானங்களை விட்டும், கெடுத்து (அப்புறப்படுத்தி)விட வேண்டாம். இங்ஙனம் யாரேனும் (சுக போக மாய்கையில் மூழ்கி தவறுதலான) காரியம் செய்து விடுவாரா யின் அவரே மிக நஷ்டவாளியாவார். எனவே, (நன்மையை நாடும்) முஸ்லிம்களே, (இறைவனாகிய) யாம் உங்களுக்கு அளித்த சொத்து செல்வங்களிலிருந்து (அல்லாஹ்வுடைய மார்க்கத்தில், நற்காரியங் களுக்காக) உங்களுக்கு மரண காலம் சம்பவிக்கும் முன்னாலேயே செலவு செய்யுங்கள். (புண்ணியம் தேடிக் கொள்ளுங்கள்) அப்படி மரண காலம் நேரிட்டு விடுமாயின் "அந்தோ, எனக்கு சொற்பகால சந்தர்ப்பம் கொடுத்தால் நான் (இப்போதே) நற்காரியம் செய்து (தான தர்மம் செய்து) புண்ணியம் சமபாதித்துக் கொள்வேன் என்று நான் உன்னுடைய நல்லடியார்களில் சேர்ந்து கொள்வேன் என்றும் (பாவியானவன்) சொல்வான்" ஓர் ஆத்மாவுக்கு முடிவு காலம் நேரிட்டு விடுமாயின், அல்லாஹு தஆலா ஒரு விநாடியும் அதனைப் பிற்படுத்தி (மரண காலத்தைத் தள்ளி வைத்து) சந்தர்ப் பம் அளிப்பதில் எனவே மூமின்களே, உங்களுடைய எல்லா விவ காரங்களையும் அல்லாஹு தஆலா நன்கறிந்தவனாக இருக் கின்றான்.

(ஜுஸு: கத்ஸமி அல்லாஹ்; ஸூரா: முனாபிகூன்; ருகூ: 2)

துன்பம் இறைவன் நாட்டமின்றி நேரிடுவதில்லை

(உலக வாழ்வில்) நேரிடும் எந்தத் துன்பமும் (எந்தக் கவலை யும்) அல்லாஹ்வுடைய கட்டளை யில்லாமல் (நாட்டமில்லாமல்) நேர்ந்து விடுவதில்லை. எனவே எவனொருவன் துன்பம் (சஞ்சலம்) நேரிடும் போது, அல்லாஹ் (தஆலா)வின் மீது பூரண நம்பிக்கை (பொறுப்பு) வைக்கின்றானோ அவனுக்கு அல்லாஹு தஆலா அந்த துன்பங்களை விட்டும் தப்பிக்கும் (காப்பாற்றிக் கொள்ளும்) மார்க் கத்தையும் காட்டிக் கொடுக்கின்றான். (ஆவதும் அவனால், கெடு வதும் அவனால் என்று அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து சகிப்புத்தன்மையோடு வாழ வேண்டும்; அப்படி பொறுமை யனுஷ் டித்து இறைவனைத் தொழுது வணங்கினால் எப்படிப்பட்ட கஷ்ட மும் கடவுள் கருணையால் நீங்கிப்போய் விடும். இதுதான் மூமின் களின் இலக்ஷணம்.)

(ஜுஸு: கத்ஸமி அல்லாஹ்; ஸூரா: தகாபுன்; ருகூ: 2)

ஹஜ்ரத் 'க்வாஜா' முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஜீவிய சரிதை.

(டி. எப். ரஹ்மத்துல்லாஹ்–மஆலி சாஹிப் (பாகவி)

29—ம் பாகம்

'முஹப்பத்' என்னும் விசுவாசம்.

அல்லாஹு தஆலா இடம் முஹப்பத் (என்னும் மெய் விசுவாசம்) வைக்க வேண்டியது அஹ்லெதரீகத்துகளுடைய அனுஷ்டான முறையாகும். இதை 'ஹுப்புல்லாஹ்' என்றும் சொல்வார்கள். இதைப்பற்றி ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் விளக்கம் கூறி யிருப்பதாவது:—

'முஹப்பத்' என்பது நான்கு வகைப்பட்ட தர்ஜாக்களை உடையதாகும். 1-வது எப்போதும் அல்லாஹு தஆலா இடத்தில் மனப்பற்று வைத்து தியானித்துக் கொண்டே இருப்பதாகும்.

2-வது அல்லாஹ்வுடைய முஹப்பத்தில், முற்றும் ஆழ்ந்து பரிபூரணமான தர்ஜாவை அடைவதாகும். அதாவது அல்லாஹ்உடைய திக்ரு என்னும் தியானத்தில் ஆழ்ந்து அதிலேயே இன்பமும் பேரானந்தமும் அடைந்து கொண்டிருப்பதாகும்.

3-வது உலக சம்பந்தமான ஆசாபாசங்களை விட்டும், பற்றுதல்களை விட்டும் ஒதுங்கி திக்ரிலும் அவ்ராதிலும் ஈடுபட்டிருப்பதாகும். மனைவி, மக்கள், சொத்து, செல்வ ஆசைகள் அல்லாஹுடைய முஹப்பத்தைத் தடுத்து குறைத்து விடாமற்படி பேணி நடந்துகொள்ள வேண்டும்.

4-வது அல்லாஹுடைய முஹப்பத்தில் லயித்து, தன்னுடைய நப்ஸின் போக்கை ஒத்துப் பார்த்து சதா அழுது துக்கப்பட்டுப் புலம்பிக் கொண்டிருப்பதாகும். (இத்தகைய புலம்பலில் அல்லாஹ்வைத் தவிர வேறெந்த சிருஷ்டியின் பிரஸ்தாபமும் இல்லாதிருக்க வேண்டும்.)

எளியோர்களுக்கு உபகாரம் செய்தல்.

பொதுவாக எளியவர்களுக்கு உதவி உபகாரம் செய்வது இஸ்லாமிய ஷரீஅத்தில் எல்லோர் மீதும் கடமையாகும். அஹ்லே தரீகத்துகளுடைய வழக்காசாரத்திலும் இந்த பரோபகாரமும் ஜீவகாருண்யமும் சிறப்பாக உண்டு. இதை யொட்டி நம் ஹஜ்ரத் க்வாஜா ஸாஹிப் அவர்கள் விளக்கம் கூறி இருப்பதாவது:—

கஷ்டப்படுகிறவர்களை அக்கஷ்டத்திலிருந்து காப்பாற்றுதல், இயலாத எளியவர்களுக்கு உதவி உபகாரங்கள் புரிதல், பசித்திருப்பவர்களுக்கு உணவு அளித்து உண்ணச் செய்து பணக்கஷ்டத்தைப் போக்குதல், தாகித்தவர்களுக்குத் தண்ணீர் கொடுத்துத் தாகவிடாயைத் தீர்த்து வைத்தல் முதலிய புனிதமான காரியங்களில் அஹ்லெ தரீகத்துகள் ஈடுபட்டிருக்க வேண்டும்.

இன்னும் கியாமத்து (மஹ்ஷர்) நாளுடைய கஷ்டங்களை விட்டும் திடுக்கங்களை விட்டும் தப்பிக்க ஆர்வமுடையவர்கள் இவ்வுலக வாழ்வில் ஏழை எளியோர்களுக்கும், ஜீவ ஜந்துக்களுக்கும் பிறரால் துன்புறுத்தப் படுபவர்களுக்கும், தக்க உதவியும் சகாயமும் புரிந்து ஆதரிப்பார்களாக.

பசித்த ஏழை எளியோர்களுக்கு உணவு சாப்பாடு இடவசதி அளித்து ஆதரிப்பது மகா புனிதமான நற்கருமமாகும். மறுமையில் நரகத்துடைய கஷ்டங்களை விட்டும் வேதனைகளை விட்டும் தப்பிப்பதற்கு இந்த நற்செயல் (பசித்தவர்களுக்கு உணவளிப்பது) மிகவும் பொருத்தமானதாகும்.

“ஒரு ஏழைக்கு உணவு அளித்தால் அந்த நன்மையானது நரகத்துக்கும் நல்லடியாருக்கு மிடையில் ஏழு திரைகளாகி குறுக்கிட்டுக் காப்பாற்றுகிறது”.

நப்ஸுக்கு நலமான நான்கு அமல்.

அங்கங்களுக்கு அழகு அலங்காரம் செய்வது போல் நப்ஸுக்கும் அலங்காரம் செய்ய நான்கு வகையான நல் அமல்கள் இருக்கின்றன. அவை:—

(1) பசித்தவர்களுக்கு உணவு, தண்ணீர் அளித்து உபகாரம் புரிவது.

(2) பிறரிடம் கஷ்டப்படுவோர், துன்பப் படுவோர்களைக் காப்பாற்றி பரோபகாரம் புரிய வேண்டும்; அல்லது கஷ்டங்கள் நீங்க பண உதவி செய்ய வேண்டும்.

(3) ஹாஜத்துடையவர்களின் ஹாஜத்தை நிறைவேற்றி வைத்தல் வேண்டும் அதாவது நம்மை யடுத்திருப்பவர்க்கு என்ன விதமான தேவை (ஹாஜத்து) இருந்த போதிலும் நம்மால் முடிந்த வரை, நேர்மையான விதத்தில் அதை நிறைவேற்றி வைக்க வேண்டும்.

(4) விரோதிக்கு விட்டுக் கொடுத்தல் அதாவது ஒருவன் நம்முடைய கடுமையான விரோதியாக இருந்த போதிலும் அவனிடம் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்ற மனப்பான்மை கொள்ளாமல், அவனிடத்தில் கருணை காட்டுவதும், மன்னித்து விடுவதும் நல்ல முறையில் நடந்து கொள்வதும் அறக்கடமையாகும்.

(அன்பு வழியினல் கொடிய நெஞ்சம் உடையவனையும் திருத்தி நல்வழிக்குக் கொண்டு வந்து விடலாம். பகைவன் முன் நாமும் கடுகடுத்து முகம் கோணுமல் அன்பு முகம் காட்டி, நம்முடைய நல்லபிமானத்தைத் தெரிவித்துக் கொண்டால் அவனும் திருந்தி நல்லவனுகி நம்முடைய நண்பனுகி விடுவான்.)

அல்ஹம்து ஸூராவின் மகிமை.

அல்ஹம்து ஸூரா என்னும் ஸூரத்துல் பாத்திஹாவுக்கு அநேக 'பாய்தா'க்கள் உண்டு. எந்த நாட்டத்தை (ஹாஜத்தை) நாடி அதை முறைப்படி ஓதினல் அதனல் மகிமை உண்டாகும். ஆனுல் அதை ஓதுவதற்கு ஒழுங்கு முறை (ஆதாப்)கள் உண்டு. நல்ல நம்பிக்கை (அகீதா)வோடு ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுவதால் கைகண்ட பலனை அளித்திருக்கிறது.

யாருக்கேனும், ஏதேனும் சங்கடம் நேரிட்டிருக்கும் போது, அவர் ஸூரத்துல் பாத்திஹாவை ஓதுவதற்கு முன் "பிஸ்மில்லா ஹிர்ரஹ்மா னிர்ரஹீம்" ஓதும்போது, "னிர்ரஹீம்" உடைய மீமை 'அல்ஹம்து லில்லாஹி' உடைய அலிபுடன் சேர்த்து இணைத்து ஓத வேண்டும். அதாவது "னிர்ரஹீமில் ஹம்து லில்லாஹி......" என்று ஓத வேண்டும். பிஸ்மில்லாஹ்வுக்கும் அல்ஹம்துக்குமிடையில் பிரிவினை கூடாது.

இங்ஙனம் ஏழு முறை ஸூரத்துல் பாத்திஹாவை ஓதி முடித்து இறுதியில் மெல்ல 'ஆமீன்' சொல்ல வேண்டும். பிறகு அல்லாஹு தஆலா இடத்தில் நாட்டத்தைக் கேட்டுக் கொண்டால், இன்ஷா அல்லாஹ் நிச்சயம் வெற்றி காணலாம்.

அல்லாஹு தஆலா யார் யாரை நேசிக்கின்றுன்?

அல்லாஹு தஆலா, தன்னுடைய சிருஷ்டிப்புகளில், கடலையும், சூரியனையும். பூமியையும் சிறப்பானதாகப் படைத்திருக்கின்றுன். கடலுக்கு கொடைவள்ளல் தன்மை உண்டு. அதிலிருந்து முத்து, பவளம், மீன் வகை முதலிய செல்வங்கள் கணக்கில்லாமல் கிடைக்கின்றன. அடுத்தபடியாய் சூரியப் பிரகாசத்தால் பிரபஞ்சத்தில் உயிர் வாழும் சகல ஜீவஜந்துக்களுக்கும் மகாப் பிரயோஜனம் உண்டாகிறது. பூமியானது எல்லா ஜீவன்களையும் தன் முதுகின் மேல் தாங்கிக் கொண்டிருந்து அவர்கள் என்ன கொடுமை செய்தாலும் சகித்து தன் தாழ்மை குணத்தைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

எனவே, யார் யாரிடம் (1) கடல் உடைய கொடைவள்ளல் தன்மையும் (2) சூரியனுடைய கருணைத் தன்மையும் (3) பூமியுடைய தாழ்மைத் தன்மையும் இருக்குமோ அவர்களை அல்லாஹு

தஆலா நேசித்து தன்னுடைய நல்லடியாராக்கிக் கொண்டு ஆதரிக்கின்றான்.

சகவாசத்தின் நற்பிரயோஜனம்.

நல்ல சகவாசத்தினால் நல்ல பிரயோஜனமும் கெட்ட சகவாசத்தினால் கெட்ட பயனும் உண்டாவது சகஜம். "நல்லோரின் உறவு உன்னை நல்லவனாக்கும். கெட்டோரின் உறவு உன்னைக் கெட்டவனாக்கும்" என்பது பார்ஸிப் பழமொழி.

(பூவுடன் சேர்ந்த நாரும் மணம் பெறும் என்பதும், பன்றியுடன் சேர்ந்த கன்றும் பீ தின்னும் என்பதும தமிழ்ப் பழமொழி.)

இதை யொட்டி நம் ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்கள்.

"நீங்கள் எப்போதும் ஸாலிஹின்கள், ஆலிம் உலமாக்களுடைய ஸுஹ்பத்தில் சேர்ந்திருங்கள். பெரியோர்களுடைய திருச்சபையில் வீற்றிருப்பதால் அல்லாஹ்வுடைய ஞாபகம் உண்டாகும். அல்லாஹ் ரஸூலுடைய திருநாமங்கள் அங்கு பிரஸ்தாபிக்கப்படும். எந்த இடத்தில் நன்மையான விஷயங்கள் பேசப்படுகின்றனவோ அங்கு அங்கு அல்லாஹ்வுடைய ரஹ்மத்து உண்டாகும் நல்லோரிடம் இணங்கி யிருப்பது ஒரு நற்காரியம் செய்வதற்கும் தீயோரிடம் சேர்ந்திருப்பது ஒரு கெட்ட காரியம் செய்வதற்கும் ஒப்பாகும்."

சில ஞானோபதேசங்கள்.

(1) ஆறுகளும் கடலும் கலக்கும் விவேகப் பேச்சு

ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்கள் ஆறுகளுக்கும் ஆழ்கடலுக்கும் சேர்த்து ஓர் உதாரணம் சொல்லி தமது ஞானச் சிஷ்யர்களுக்கு நல்லுபதேசம் செய்தார்கள். அவைகளில் சில:—

ஆற்றிலும், வாய்க்காலிலும், ஓடையிலும் ஜலம் வெள்ளம் புரண்டோடும் போதும் இரைந்து சப்தம் செய்து கொண்டும், குப்பைக் கூளங்கள் சேர்த்து அடித்துக் கொண்டு குழப்பம் செய்து கொண்டு பிரவாகமாய் ஓடுகின்றன. ஆனால், ஆறு, நதி, வாய்க்கால் யாவும் நெடுகப்போய் மகாப் பெரும் சமுத்திரத்தில் கலந்து சேர்ந்து தன்னை பனுவாக்கி (இல்லாமலாக்கிக்) கொள்கின்றன. அதன்பின் அவற்றில் இரைச்சலோ சப்தமோ, குழப்பமோ கிடையாது. முற்றும் சமுத்திரத்தில் கலந்து சாந்தமடைந்து விடுகின்றன. ஆறு, நதிகளின் நாமதேயமே அப்புறம் கிடையாது. இதைப்போல் ஞானவான்கள் ஞானப்பிரியர்கள் 'ஸுலூக்' உடைய வழிகளை யெல்லாம் கடந்து அல்லாஹ்வுடைய மன்ஜிலில் (இலக்ஷியத்தில்) சேர்ந்து வரும்போது சாந்தம் அடைந்து ஐக்கியமாகி விடுகின்றனர்.

(2) நல்லோரும் வாழும் நல்லுலகம்.

ஆண்டவன் படைத்த இப்பிரபஞ்சத்தில் அல்லாஹ்வின் நல்லடியார்களான மகான்கள் இருந்து கொண்டேதான் இருக்கிறார்கள். அல்லாஹ்வின் நல்லடியார்கள் யார் என்பது நம் கண்களுக்குத் தெரிவதில்லை; அவர்கள் தங்களை விளம்பரம் செய்து கொள்ளவும் மாட்டார்கள்.

அப்படிப்பட்ட மகான்கள் எங்கேயாவது மூலைமுடுக்கில், குடிசையில், ஆடம்பர மில்லாமல் வாழ்ந்து கொண்டிருந்து, காலம் முடிந்ததும மரித்து மறைந்து போவார்கள். அப்படிப்பட்ட உத்தமர்கள் உலகில் எப்போதும் இருந்து கொண்டு இருப்பதால் தான் உலகம் அழிந்து போகாமல் காப்பாற்றப்பட்டு வருகிறது. எந்தக்காலமும் மகான்கள் இல்லாத காலமில்லை எனவே, அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று நாம்தான் தேடிச்சென்று அணுகிப் பயன் அடைய வேண்டும்.

(3) அல்லாஹ்வின் 'வலீ' என்பது யார்?

அல்லாஹ்வின் நல்லடியார்களே 'வலீ' (மகான்)கள் ஆவார்கள். அவர்களிடம் மூன்று நற்குணங்கள் குடிகொண்டிருக்கும். அவர்கள் தண்ணீர் நதியைப்போல் நல்லோர்—பொல்லோர் எல்லோருக்கும் நல்லுபதேசத்தால் நல்லுதவி புரிந்து கொண்டிருப்பார்கள். இன்னும் சூரியன், உலக ஜீவன்கள் அனைத்துக்கும் சமமாக பிரகாசம் தருவதுபோல், அந்த வலீமார்கள், எல்லோருக்கும் தங்கள் நல்லுரைகளால் நலமடையச் செய்து கொண்டிருப்பார்கள். இன்னும் அவர்கள் பூமியைப்போல், சகலரின் எதிர்ப்பையும் தாங்கிக் கொண்டு பொறுமையே பூஷணமாய் இருந்து கொண்டு நன்மை செய்து கொண்டிருப்பார்கள். இவைதான் வலீமார்களுக்கு அடையாளம்.

(4) பிறரை ஏளனம் செய்யக் கூடாது.

பாபம் செய்வதனால் மாந்தருக்கு ஆத்மார்த்தமான தீங்குகள் பல உண்டாகிறதெனினும், பிறரைக் கேவலமாய் எண்ணிக் கொண்டு பரிகாசம் செய்வதாலும் குறை சொல்லிப் புறம் பேசுவதாலும் ஆத்மார்த்தத்துக்கு அளவற்ற தீமைகள் உண்டாகின்றன. ஆகையால் ஞானவழியில் நடக்கும் நல்லோர்கள் யாரையும் கேவலமாய் எண்ண மாட்டார்கள். யாரையும் குறைகூறிக் கேவலப்படுத்த மாட்டார்கள். நல்லோர்க்கு எல்லோரும் நல்லவர்களே.

 (ஜூன்—1962)

(5) அல்லாஹ்வை அடையும் வழி.

உலக ஆசாபாசங்களில் உழன்று கொண்டே இருப்பவர்களுக்கு அல்லாஹ்வின் நல்லருள் கிடைப்பதில்லை. எனவே எவர் உலகப்படைப்புகளை விட்டு ஒதுங்கி பரிசுத்தமான வாழ்க்கை நடத்துகிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் அருள் எளிதில் கிடைக்கும்.

உலகத் தொல்லையிலும் வியாபாரம் கொடுப்பல் வாங்கல் முதலிய கடுபிடியான தொழில்களிலும் ஈடுபட்டு லோக பாசத்தினராய் விளங்கும் பேர்வழிகள் தங்களை 'ஆரிப்' என்றும் ஞானவான் என்றும் கூறிக்கொள்ள வேண்டாம்.

(6) ஆரிபின் அடையாளம்.

ஆரிப் என்னும் மெய்ஞ்ஞானிக்கு அடையாளம் யாதெனில்: அவர் உலகச் சொத்து செல்வங்களின் மீது ஆசை வைக்க மாட்டார்; யாரிடமும் பற்றும் பகைமையும் கொள்ள மாட்டார். எதிலும் பற்றற்ற வாழ்க்கை வாழ்ந்து வருவார். அல்லாஹ்வைத் தவிர்த்து வேறு எதுவும் அவர் மனதில் இடம் கொள்ளாது.

(7) மௌனத்தின் மேன்மை.

மௌனமாய் வாய் மூடியிருந்து, சிந்தனை செய்வதும் ஒரு வகை இபாதத்தேயாகும். வாயும், கண்ணும் மூடி யிருந்தால், ஹிருதயமும் மூளையும் நன்கு தன் வேலைகளைச் செய்து கொண்டிருக்கும். எனவே, 'ஆரிபு பில்லாஹ்'களாகிய ஞானவான்கள் வாய் மூடி மௌனியாகவும், விசாரத்தில் ஆழ்ந்த வியாகூலஸ்தர்களாகவுமே காட்சி யளிப்பார்கள்.

(8) உள்ளத்தில் கஃபாவை ஏற்படுத்துதல்.

மெஞ்ஞானியானவர் வெறுமனே சரீரத்தையும், அங்கங்களையும் கொண்டு, கஃபத்துல்லா சுற்றிச் சுற்றி (தவாப்) வருவதில் திருப்தி கொண்டு இருந்துவிட மாட்டார் எனவே, உடலைக் கொண்டும் அங்கங்களைக் கொண்டும் 'தவ்வாப்' செய்யாதே.

(9) ஆரிபுபில்லாஹ் உடைய உள்ளத்தில் (கல்புக்குள்) கஃபாவின் தன்மை அமைந்திருக்கிறது. எப்போதும் அவர் உள்ளத்தில் அல்லாஹ் இடம் பெற்றிருப்பான். எனவே, வெறும் சடங்காக கஃபாவைச் சுற்றிச் சுற்றி வருதால் பயன் இல்லை.

(10) ஞானியின் நிலையே தியானம். எந்த நிலையிலும் ஆரிபாகிய ஞானியாகிறவர், அல்லாஹ் உடைய தியானத்திலேயே இருப்பார். அவர் நிற்கும் நிலையும், உட்காரும் இருப்பும், படுக்கும் தூக்கமும் அல்லாஹ் உடைய வணக்கத்தை விட்டும் வீண் போவதில்லை. எனவே, மெஞ்ஞானி எந்த நிலையிலும் அல்லாஹ்வின் சன்னிதானம் விட்டுப் பிரிந்திருப்பதில்லை.

(11) மெஞ்ஞானிகளின் மன நிலை.

மெஞ்ஞானிகள் எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. சில சமயம் அவர்கள் தன்னையே மறந்து கிடப்பார்கள். அப்படிப் பட்ட சமயங்களில் அவர்களை அணுகி எதுவும் கேட்கக்கூடாது; எதுவும் செய்யும்படி கோரக்கூடாது; அவர்களை அப்போது அவர்களின் சுயநிலையிலேயே விட்டுவிட வேண்டும்.

(12) மெஞ்ஞானியின் போக்கு.

மெஞ்ஞானியானவர் சில சமயம் அல்லாஹ்வை மிகவும் நெருங்கி 'லிகாஃ'வில் இருப்பர் அப்போது அவர்கள் ஒரு அடி எடுத்து வைத்துப் பெருமிதம் கொள்வர். மறுஅடி எடுத்து வைக்க மனப்பக்குவமின்றி பின்டைந்து விடுவர்.

முடிவுரை இத்துடன், ஹஜ்ரத் க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரஹ்) அவர்களது வாழ்க்கை வரலாற்றை முடித்துக் கொள்ளப்பட்டது. மற்றும் அநேக போதனைகளும் வரலாற்று விளக்கங்களும் இச்சிறு நூலில் இடம் பெறவில்லை. இன்ஷா அல்லாஹ் நூல் வடிவில் இவை பூர்த்தி செய்து வெளிவரும்.

வஆகிரு தஃவானு அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்.

முற்றிற்று.

மஜ்மூஉ மவ்லூது.

இதில் றஸூலுல்லாவுடைய மவுலூதும், அதன் துஆக்களும், அந்த மௌலூதின் வரிசைகளும், ஒவ்வொரு பைத்தின் தலைப்பில் அதற்குள்ள ஸலவாத்துப் பாட்டுகளும், அதபுகளும், இத்துடன் முஹ்யித்தீன் ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், மீரான் ஸாஹிபு ஆண்டவர்கள் மவுலூதும், அதன் துஆக்களும், அதன் வரிசைகளும், யாஸெய்யதி, யாகுத்பா, யாஸைய்யிதி ஷைகி, மழை பைத்து, ஜுத்பி ஹுத்பிக முனாஜாத்தும், பீஹுப்பி ஸையிதினா பைத்து முதலியவைகளும் தமிழால் சுத்தமாய் எழுதி கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—00

ஷை மூன்று மவ்லூதுகளும் அறபியில் கிளேஸ் காகிதம் கலிகோ பைண்டு. விலை. ரூ 1—80

மஜ்மூஉஸ் ஸலவாத்து.

இப்புத்தகம் அல்லாஹு தஆலாவின் அஸ்மாவுல் ஹுஸ்னாவைப் பொதிந்த **துஆ கன்ஜுல் அர்ஷும்**, இன்னும் நபிகள் நாயகம் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் பேரில் எப்போதும் க்ஷேமமாய் ஓதி வருகிற ஸலவாத்துகளில் மிகவும் புகழானதும் மற்றும் ஸலவாத்துக் கெல்லாம் தாயானதுமான **உம்மு ஸலவாத்தும்**, இன்னும் அல்குத்புர் றப்பானீ வல்கவ்துஸ் ஸமதானீ முஹ்யித்தீன் அப்துல் காதிரி ஜைலானி றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் **கவ்திய்யா ஸலவாத்தும்**, இன்னும் ஸெய்யிதினா குத்புல் அக்தாபு வகவ்துல் அஃபாபு ஜிந்தா ஷாஹ் மதார் பதீவுத்தீன் றலியல்லாஹு அன்ஹு அவர்கள் பேரில் ஓதப்படும் **மதாரிய்யா ஸலவாத்தும்**, இன்னும் அநேக சில்லரை ஸலவாத்துகளும், துஆக்களும் ஒருங்கே சேர்ந்த அருமையான கிதாபு. சுத்தத் தமிழில் சிறியதாய் பாக்கெட் புத்தகம் போல் கிளேஸ் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை ரூ. 1—00

ஷை அறபுத் தமிழ் விலை ரூ. 1—00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

புது வாழ்வு.

ஓர் கற்பனை நாவல்

(எம். எம். தீன்)

1

பட்டு நிலா தன் பளபளப்பைப் பாரெல்லாம் பரப்பிக் கொண்டிருந்த பசுமையான இரவுநேரம்! புதுமணத் தம்பதிகள் கொஞ்சி மகிழும் புத்தம் புதிய புதுமையான இரவு நேரம்! கருத்தொருமித்த காதலர்கள் கள்ளத்தனமாகச் சந்தித்து, சிந்தை மகிழும் களிப்பு நிறைந்த இரவு நேரம்!

அமைதி தவழும் அந்த இரவு நேரத்தில், இருபத்தி ஐந்து வயது மதிக்கத்தக்க வாலிபனொருவன், பலகை வாராவதியிலிருந்து அடையார் கஸ்தூரிபாய் நகரை நோக்கி, ஓட்டமும், நடையுமாக வந்து கொண்டிருந்தான்.

அந்தச் சமயத்தில் அவனை யாராவது பார்த்தார்களேயானல், கொலை செய்துவிட்டு ஓடுகிறவனைப் போலவும், கொள்ளை யடித்துக் கொண்டு வருகிறவனைப் போலவும், அவனுடைய முகம் பேயறைந்ததைப்போல் காட்சியளித்தது!

அப்படி ஓட்டமும், நடையுமாக வந்த வாலிபன், கஸ்தூரிபாய் நகர் இரண்டாவது மெயின் ரோடிலுள்ள ஒரு பங்களாவின் வெளி கேட்டைத் திறந்து உள் கதவைத் தட்டினன். கதவு திறக்கப்படவில்லை! மீண்டு மொருமுறை பலமாகத் தட்டினன்! அப்போது உள்ளிருந்து ஒருவன் "யாரையா, இந்நேரத்துலே வந்து கதவைத் தட்றது?" என்று கேட்டுக் கொண்டே கதவைத் திறந்தான்.

திறந்தவன், பீதியுடன் எதிரில் நிற்கும் அந்த வாலிபனை, ஒரு முறை ஏற இறங்க நன்ருகப் பார்த்துவிட்டு, "யாரப்பா நீ? எங்கே வந்தே?" என்று கேட்டான்.

"என் மனைவிக்குப் பிரசவ நேரமய்யா! வேதனை தாங்க முடியாமல் துடிக்கிருள்! டாக்டரம்மாவை அழைத்துப் போக வந்தேன். தயவு செய்து கொஞ்சம் போய்ச் சொல்லுங்கள் அய்யா!" என்று கெஞ்சும் குரலில் சொன்னன்.

"யாரப்பா, நீ ஒண்ணு! டாக்டரம்மா இந்நேரத்துலே எந்தக் கேசுக்கும் போற வழக்கமில்லே. வேறு எந்த டாக்டரையாவது கூட்டிக்கிட்டுப்போ!" என்று பதில் சொன்னன்.

"அப்படி எல்லாம் சொல்லாதீர்களய்யா! இந்தப் பகுதியிலே வேறு எந்தப் பெண் டாக்டரும் இல்லையய்யா!" என்று சொன்னன்

"இல்லேன்ன, என்னய்யா செய்யச் சொல்றே? ஆசுபத்திரியுமா இல்லே? அங்கு கொண்டு போ'' என்று சொன்னுன்.

"இந்த நடுநிசியில் வண்டி எங்கிருந்தய்யா கிடைக்கப் போகிறது? கொண்டு போவதற்குள் என்ன ஆகுமோ! உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு அய்யா! கொஞ்சம் போய்ச் சொல்லுங்கள்!'' என்று அழாதக்குறையாகச் சொன்னுன்.

"ஏம்பா? ஒரு தடவைச் சொல்றேனே தெரியலே உனக்கு? பட்டிக்காட்டான் மாதிரி பேசிகிட்டே போறியே! போ! போ!'' என்று சொல்வதற்கும், மாடியில் புத்தகம் படித்துக் கொண்டிருந்த டாக்டர் சந்திரா, கிழே சத்தம் கேட்டு இறங்கி வருவதற்கும் சரியாக இருந்தது.

வந்தவள், "என்ன வேலா, சத்தம் போட்டுக் கொண்டு இருக்கிருய்? யார் இவர்? என்ன வேண்டுமாம்?'' என்று கேட்டு விட்டு, அங்கு நின்று கொண்டிருந்த வாலிபனை நன்ருகப் பார்த்து, தன் மனதிற்குள், "இப்படியும் ஒரு அழகான சிருஷ்டியை ஆண்டவன் உலகத்தில் படைத்திருக்கிருனே!'' என்று எண்ணிக் கொண்டாள்.

டாக்டர் சந்திராவின் கேள்விக்கு வேலாயுதம் பதில் சொல்வதற்குள், வாலிபனே தான் வந்த விபாத்தை எடுத்துச் சொல்லி "என் மனைவியைக் காப்பாற்றுங்கள் டாக்டர்!'' என்று கண் கலங்கச் சொன்னுன்.

டாக்டர் சந்திராவின் கார், வாலிபனின் வீட்டின் முன் வந்து நின்றது. இருவரும் இறங்கி உள்ளே சென்ருர்கள்.

அந்த வீட்டின் ஓர் அறையில் ஒரு பெண் நினைவு இல்லாமல் படுத்திருந்தாள். அந்தப் பெண்ணைச் சுற்றி ஏழெட்டுப் பெண்கள் சூழ நின்று கொண்டிருந்தார்கள்.

சந்திராவும், வாலிபனும் உள்ளே நுழைவதைக் கண்ட அந்தப் பெண்களிலொருத்தி "அண்ணு! அண்ணி போயிட்டாங்கண்ணு!'' என்று சொல்லி அழுதாள்!

உடனே டாக்டர் சந்திரா, அந்தப் பெண் அருகில் சென்று முகத்தைப் பார்த்தாள். பார்த்தவள் பதுமையாக அப்படியே நின்று விட்டாள்! சந்திரா, இப்படி தன்னை மறந்த நிலையில் நிற்பதைக் கண்ட அங்கிருந்த பெண்கள், "என்ன டாக்டர்? ஏன் இப்படி நிக்கிறீங்க?'' என்று கேட்கவே, டாக்டர் சந்திரா, தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு நாடியைப் பரிசோதித்துப் பார்த்து விட்டு, வாலிபன் அருகில் வந்து, "மிஸ்டர்! நீங்கள் என்னிடத்தில் நேரம் கழித்து வந்திருக்கிறீர்கள். குழந்தை வயிற்றிலே மரித்து விட்டதால் தாயினுடைய உயிரும் பிரிந்து விட்டது! இப்போது என்னுல் ஒன்றும் செய்ய முடியாது. அதற்காக நான் மிகவும் வருந்துகிறேன்!'' என்று சொன்னுள்.

பிரமை பிடித்தவன் போல் நின்று கொண்டிருந்த வாலிபனின் இதயத்தில் சந்திராவின் சொற்கள் பேரிடியாக வந்து விழுந்து தாக்கிற்று.

அந்தத் தாக்குதலைத் தாங்க முடியாமல், ஓடோடிச் சென்று பிணமாகக் கிடந்த அந்தப் பெண்ணை வாரியணைத்துக் கொண்டு "பிரேமா! என் பாசத்தின் மணிவிளக்கே! என்னை விட்டுப் போய் விட்டாயா, கண்ணே! "இந்தப் பாவியிடமிருந்து தொல்லைகள் அனுபவிக்க வேண்டாம்; பசி பட்டினியால் வேதனைப்பட வேண்டாம்!" என்று நினைத்து, படைத்தவனின் பரந்த உலகத்திற்கே பறந்து விட்டாயா, என் பைங்கிளியே! என் குலத்தின் கோலமே! உன் உயிர் போகும்போது எப்படித் துடித்ததோ? யாரை நினைத்ததோ உன் உள்ளம்? உன் எழில் கண்டால் கொத்தவரும் கொடும் பாம்பும், மதிமயங்கி படமெடுத்து ஆடுமே! மின்னும் உன் விழிகளைக் கண்டால், பொன்னும் மணியும், முத்தும் பவளமும் கீர்த்து விடுமே! அந்தப் பாவி எமனுக்கு எப்படித்தான் மனம் வந்ததோ உன் உயிரை வாங்க?

வாழ்வதற்கு வசதி இல்லாமல், வறுமையை நீக்க வகை தெரியாமல், வயிற்றுப் பசியைப் போக்க வேலை இல்லாமல் விழித்த என்னை, தீந்தமிழிலே, தெள்ளமுது மொழியிலே தேனாகப் பேசி தேற்றுவாயே, இப்போது யார் கண்ணே என்னைத் தேற்றுவார்கள்? எங்கே போய்த் தேடுவேன்? "நமக்கும் ஒரு நல்ல காலம் வரும், வரும்!" என்று என்னை நம்ப வைத்தாயே, அது இந்த காலம் தானா என் இன்பமே! உன் மாமன் வீட்டைத்தேடி உதவியை நாடிப் போனதற்கு "நிறைகர்ப்பிணி நிலை தவறி வந்திருக்கிறாள்!" என்றும் பாராமல், "பயித்தியக்காரி! பணத்திற்கு இங்கே எங்கே வந்தாய்? போ வெளியே!" என்று வெறிநாயை விரட்டுவதைப் போல் விரட்டியதைப் பொறுக்க முடியாமல், இந்த உலகத்தை விட்டே போய் விட்டாயா, என் செல்வமே! "நமக்கு ஒரு செல்வன் பிறப்பான்; அவனுடைய சின்னச்சிறு சிங்கார முகத்தைக் காண்போம்; சிந்தை மகிழ்வோம்!" என்ற சிந்தனையில் ஓடி வந்த என்னை சந்தியில் நிற்க வைத்து விட்டு, நீ மட்டும் சென்று விட்டாயே, என் செல்வமே! யாரிடம் போய்ச் சொல்வேன், என் குறையை? மாண்ட உன்னை மீட்டுத் தருபவர்கள் யார் கண்ணே? யார்" என்று கதறினான்! துடித்தான்! துவண்டான்! அவனுடைய பரிதாபமான நிலையைக் கண்டு அங்கிருந்தவர்களெல்லாம் அழுதார்கள்! டாக்டர் சந்திராவும் அழுதாள்!

ஒருவாறு தன்னழுகையை அடக்கிக் கொண்டு "மிஸ்டர்! என்ன இது? எல்லாம் தெரிந்த நீங்களே, இப்படி நிலை தவறலாமா? முதலில், குழந்தையைத் தாய் வயிற்றிலிருந்து ஆப்பரேஷன்

செய்து எடுக்க வேண்டும். ஆசுபத்திரிக்குக் கொண்டு போகலாம். தூக்குங்கள்'' என்று சந்திரா சொன்னாள்.

''என் பிரேமாவை ஆசுபத்திரிக்குக் கொண்டு போக வேண்டாம் டாக்டர்!''

''வேறு எங்கு கொண்டு போகச் சொல்கிறீர்கள்?''

''பிரேமாவின் மாமா வீட்டிற்கு......''

''அங்கே எதற்கு?''

''தன் மகள் வேறு, தங்கையின் மகள் வேறு என்று நினைக்கும் மனமுள்ள தறுதலையே! என் தங்கக்கட்டி தூங்கும் அழகைப் பாரடா? என்று கேட்க வேண்டும். வீட்டைத்தேடி உதவியை நாடி வந்தவளை, உடன் பிறந்தவளின் மகள் என்றும் பாராமல், உதாசினமாகப் பேசி விரட்டிய உலுத்தனே, என் ஊர்வசி உறங்கும் உருவத்தைப் பாரடா? என்று கேட்க வேண்டும். பாசத்தையும், நேசத்தையும் குழி தோண்டி புதைத்து விட்டு, பணத்தையே பந்து என்று நினைக்கும் பச்சோந்தியே, என் பச்சைக்கிளியின் உயிர் உலகக்கூண்டை விட்டுப் பறந்துவிட்ட காட்சியைப் பாரடா? என்று கேட்க வேண்டும். தன்னைத் தானறியாமல், தான் பிறந்த வரலாற்றை யுணராமல், தாவிருக்கு மிடக்தெரியாமல், பிறரைத் தரக்குறைவாகப் பேசும் தன்மையுள்ள தான்தோன்றியே, என் தேன் நிலவு தேய்ந்து மறைந்து விட்டதைப் பாரடா? என்று கேட்க வேண்டும். அப்போது தான் என் மனம் ஆறுதலடையும்! நானும் நிம்மதியாக இருக்க முடியும்'' என்று ஆத்திரத்தில் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினான்.

''மிஸ்டர்! உங்களுடைய நிலைமை எனக்கு நன்றாகப் புரிகிறது. இருந்தாலும், ஆத்திரத்தில் அவசரப்பட்டு அவரை அவதூறாகப் பேசுவதினால், மாண்ட உங்கள் மனைவியின் உயிர் மீண்டும் உயிர் பெற்று எழுமா? நீங்கள் படித்திருப்பீர்களென்று நினைக்கிறேன். அதைக் கொண்டு சிந்தித்துப் பாருங்கள். ''இப்படி நடந்ததும் ஒரு நன்மைக்குத்தான்!'' என்று நினையுங்கள். நடக்கப் போவதும் நலமாக இருக்கும். ''மறப்போம், மன்னிப்போம்!'' என்ற மனமுள்ள மனிதராக உங்களை மாற்றிக் கொள்ளுங்கள். வருங்கால உங்களுடைய வாழ்வு, நறுமணம் வீசும் மலர்ச் சோலையாக நிச்சயம் மாறும்'' என்று சொல்லி பிரேமாவை, இருவரும் ஆசுபத்திரிக்குக் கொண்டு போனார்கள்.

போகும் வழியில், வாலிபனைப் பார்த்து, ''உங்களுடைய பெயரென்னவென்று நான் தெரிந்து கொள்ளலாமா? என்று கேட்டாள்.

''தூயமணி டாக்டர்! பெயர்தான் தூயமணியே தவிர, என்னைச் சுற்றிலும் துயரமேகங்கள் தான் சூழ்ந்து கொண்டது''

''அப்படி எல்லாம் சொல்லாதீர்கள் ''வாழ்வோம்!'' என்ற நம்பிக்கையை உங்கள் நெஞ்சில் நிலையாக நிறுத்திக் கொண்டால்

காலம் உங்களை உயர்ந்தவராக ஆக்கும். எண்ணத்தைப் போலத் தான் வாழ்க்கையும் அமையும்"

"அப்படிப்பட்ட ஒரு காலம் என் வாழ்க்கையில் ஏற்படும் என்ற நம்பிக்கை எனக்கில்லை டாக்டர்!"

"படித்திருக்கிறீர்கள்! உழைப்பதற்கு உள்ளத்தில் உறுதி இருக்கிறது. முன்னேறுவதற்குத் தகுந்த திறமையும் இருக்கிறது. பின் எதற்காக தைரியத்தை இழக்கிறீர்கள்?"

"மனிதனை மனிதனாக நினைக்கும் மனப்பான்மையுள்ள மக்கள் மத்தியில் நான் வாழவில்லை டாக்டர்! அதனால் தான் என்னால் வருங் காலத்தில் வாழ முடியுமோ என்ற அச்சம் இருந்து கொண்டே இருக்கிறது"

"மனிதர்களை ஏன் நம்புகிறீர்கள்? ஆண்டவனை நம்புங்கள். உங்கள் நம்பிக்கையை நிறைவேற்றுவான்"

"அவனை நம்பி, நம்பித்தான் இந்த நிலைக்கு ஆளானேன். இன்னுமா டாக்டர், அவனை நம்பச் சொல்கிறீர்கள்?"

"துன்பம் தூரத்த தூரத்தத்தான் இன்பத்தின் பாதையைக் காண்கிறோம். அதைப்போல, இப்படிப்பட்ட வேதனைத் தாங்க முடியாத ஒரு சோதனையை உண்டாக்கித்தான், நல்லதொரு பாதைக்கு வழி வகுத்துக் கொடுப்பான்" என்று சொல்லி முடிக்க வும் கோஷா ஆசுபத்திரியும் வந்தது.

இருவரும் உள்ளே சென்று அப்போது டியூட்டியிலிருந்த டாக்டரிடம் நடந்ததைச் சொன்னாள் சந்திரா.

கேசைக் குறிப்பு புத்தகத்தில் குறித்துக் கொண்டு, காலைக்கு வரும்படி சொல்லி விடை கொடுத்தனுப்பினாள்.

கார் சந்திராவின் பங்களா முன் வந்து நின்றதும், மணி கீழே இறங்கி "டாக்டர்! உங்களுக்கு மிகவும் கஷ்டத்தைக் கொடுத்து விட்டேன்! நீங்கள், இந்த அகால வேளையில் செய்திருக்கும் உதவி யை என் நெஞ்சிலே உங்கள் நினைவிருக்கும் வரையில் நன்றியுள்ள வனாக இருப்பேன்" என்று சொல்லி விட்டு போவதற்குத் திரும் பினான்.

சந்திராவும் காரை விட்டு கீழே இறங்கி "மணி! எங்கே போ கிறீர்கள்? உங்களைப் பார்த்தால், ஒன்றுமே சாப்பிடாமல் களைத்துக் காணப்படுகிறீர்கள்! பொழுது விடிவதற்கும் இன்னும் சிறிது நேரம் தானே இருக்கிறது. ஏதாவது சாப்பிட்டு விட்டு, சற்று ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, உள்ளே அழைத்துச் சென்றாள். மணியும், சந்திராவின் சொல்லைத் தட்டமுடியாமல் அவளுடன் சென்றான்.

பாலும், பழமும் அவன் முன் கொண்டு வைத்துச் சாப்பிடச் சொன்னாள்.

187089

"என்னால் உங்களுக்குக் கஷ்டம் தான் அதிகமாகிறது டாக்டர்!"

"பிறருடைய கஷ்டங்களையும், கவலைகளையும் போக்குவது தானே மணி எங்களுடைய தொழில், உங்களிடம் ஒன்று கேட்க வேண்டுமே!"

"எதைப்பற்றி டாக்டர்!"

"பிரேமாவின் மாமாவைப் பற்றி......"

"அவர் ஒரு மில் முதலாளி! பெயர் தணிகாசல முதலியார்! மாம்பலத்தில் இருக்கிறார். ஏன் டாக்டர்?"

"பிரேமா இறந்து விட்டதை அவருக்குத் தெரிவிக்க வேண்டாமா?"

"வேண்டாம், டாக்டர்!"

"என்ன இருந்தாலும் பிரேமாவின் தாய் மாமன் இல்லையா?"

"தாய் மாமன்! நெஞ்சிலே நஞ்சும், நாவிலே தேனும் வைத்துப் பேசுகிறவனை, பிரேமாவின் தாய் மாமன் என்று சொல்வதற்கும் வெட்கமாக இருக்கிறது. அந்த வஞ்சகனுக்கு என் அஞ்சுகம் இறந்து விட்டதைத் தெரிவிக்கக் கூடாது டாக்டர்!"

"அவ்வளவு ஒரு கல்மனம் படைத்தவரா அவர்?"

"கடவுளே எங்கள் விஷயத்தில் மனதைக் கல்லாக்கிக் கொண்டாரே, அவரென்ன சாதாரண ஒரு மனிதப் பிறவி!"

"நீங்கள் வேலையில்லாமலா இருக்கிறீர்கள்?"

"அதைத் தேடித்தான் அலைகிறேன் டாக்டர்!"

"எதுவரையில் படித்திருக்கிறீர்கள்?"

"பி. ஏ. பட்டம் பெற்றிருக்கிறேன்!"

"நீங்கள் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள். பொழுது விடிந்தவுடன் மற்றதைக் கவனிப்போம்" என்று சொல்லி விட்டு, தன்னறைக்குச் சென்று விட்டாள். மணியும் அங்குக்கிடந்த ஈஸிசேரில் படுத்தான்.

மறுநாள் இருவரும் ஆசுபத்திரிக்குச் சென்று பிணங்களை வாங்கிக் கொண்டு மணியின் வீட்டில் இறக்கி, "மணி! இதை வைத்துக் கொண்டு நடக்க வேண்டிய காரியங்களைக் கவனியுங்கள்" என்று சொல்லி நூறு ரூபாயை அவனிடம் கொடுத்தாள்.

"டாக்டர்!" என்று கண்ணீர் வடிய சந்திராவைப் பார்த்தான்.

"தைரியமாக இருங்கள்; மனதைத் தளரவிடாதீர்கள்; சென்று போனவைகளை நினைத்து சிந்தைக் கலங்காதீர்கள். ஆண்டவனின் எண்ணம் எப்படியோ, அப்படியே தான் நடக்கும். அவனை

நினைத்து இதை மறந்து விடுங்கள். நான் மாலையில் வந்து சந்திக்கிறேன்'' என்று சொல்லி விட்டு, அவனிடமிருந்து விடைபெற்றுக் கொண்டாள்.

பிரேமாவிற்கும், குழந்தைக்கும் செய்ய வேண்டிய சடங்குகளைச் செய்து முடித்து விட்டு "நமது வாழ்வு இப்படி ஒரு நரக வேதனையாக ஆகிவிட்டதே!'' என்று நினைத்துக் கொண்டு தூங்கி விட்டான்.

மாலை நேரம்! மணி ஐந்து இருக்கும். நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த மணி தன்னை யாரோ தட்டி எழுப்பும் ஒரு உணர்வு ஏற்பட்டு, விழித்துப் பார்க்கும்போது தன்னருகிலே சந்திரா உட்கார்ந்திருப்பதைப் பார்த்து "நீங்களா!'' என்று ஆச்சரியத்துடன் கேட்டான்.

"நானே தான் மணி! ஏன்? சந்தேகமாக இருக்கிறதா?''

"இந்த ஏழையின் வீட்டிற்கு......'' என்று சொல்லி நிறுத்தினான்.

"ஏன் வந்தாய் என்று கேட்கிறீர்களா?''

"அப்படி எல்லாம் என் மனம் கேட்காது டாக்டர்! நீங்கள் என் தெய்வம்!''

"மனிதப் பிறவிகளை எல்லாம் தெய்வமாக நினைப்பதால் தான், இன்று தெய்வத்தை "எங்கே இருக்கிறது?'' என்று தேட ஆரம்பித்திருக்கிறார்கள் போல் தெரிகிறது. நான் ஏன் வந்தேன் தெரியுமா மணி?''

"எனக்கெப்படி டாக்டர் தெரியும்!''

"நோயாளிகளைக் கவனிப்பதற்கே எனக்கு நேரமில்லை! மற்ற பொறுப்புள்ள வேலைகளையும் நானே கவனிக்க வேண்டி இருக்கிறது. ஆனால், அந்த வேலைகளை என்னால் கவனிக்க முடிகிறதில்லை. ஆகவே அந்தப் பொறுப்புள்ள வேலைகளைக் கவனிக்கவும், எனக்கு செக்ரடரியாக இருக்கவும், என் வீட்டில் நிரந்தரமாக இருக்கவும் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன். உங்களுக்கும் வேலை கிடைத்த மாதிரி இருக்கும். எனக்கும் சிறிது ஓய்வு கிடைக்கும். என்னுடைய இந்த முடிவு, உங்களுக்குப் பிடித்திருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று சொன்னாள்.

அதற்குப் பதிலொன்றும் சொல்லாமல் குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதான்!

உடனே சந்திரா, அவனருகில் நெருங்கி உட்கார்ந்து தன் சேலை முந்தானையால் அவனுடைய கண்ணீரைத் துடைத்துக் கொண்டே "என்ன மணி இது? சிறு குழந்தையா, நீங்கள்?''

சந்திரா இப்படிச் செய்யவே, மணிக்கு என்ன செய்வதென்றே தெரியாமல், அவருடைய இரண்டு கைகளையும் எடுத்து தன் கண்களில் ஒற்றிக் கொண்டு "டாக்டர்! உற்றார், உறவினரில்லாத இந்த அனாதை மீது இவ்வளவு அன்பு செலுத்தும் நீங்கள் உண்மையில் மனிதப் பிறவியே இல்லை டாக்டர்! என் சிந்தையிலே எந்த நாளும் சொந்தமாகி விட்ட அந்தமுள்ள தெய்வம் நீங்கள்!" என்று தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான்.

(தொடரும்)

மறந்தோம்.

(அ. அப்துல் வஹ்ஹாப்)

படம்: தைப் பிறந்தால் வழி பிறக்கும்

இசை: எளியோரைத் தாழ்த்தி

துன்யாவில் பிறந்தோம்—தொழுகையை மறந்தோம்
துன்பத்தைத் துய்த்தே நாம் வாழ்ந்திடுறோம்

பேரின்பம் அடைய—இருக்கின்ற வழியை
பேணிக் கொள்ளாது பிழை செய்திட்டோம்
தன்புத்தி இருந்தும்—பின்புத்தியாலே
தரித்திரப் பாவையாய் தலையாடுறோம் (துன்யா)

ஆதின் தூதர்—அப்துல்லா மைந்தர்
நீதியைக் கூறிட நிலத்திற்கு வந்தோர்
மேதினி மாந்தற்கு—ஆதி ஒருவ னென்று
சாதிக்கவே இங்கு ஜனித்தோ ராவர் (துன்யா)

ஆதியை மறந்தோம்—அவர் தூதரை மறந்தோம்
வாதிக்கும் வயிற்கிரை தேடத் துணிந்தோம்
நீதியை மறந்தோம்—நேர்மையை மறந்தோம்
அந்தத்தின் நாளை அறியாதே இருந்தோம் (துன்யா)

பாவத்தை மறந்தோம்—பழிச்செய்ய துணிந்தோம்
நீண்ட பயணத்தை நினையாதே இருந்தோம்
அப்துல் வஹ்ஹாபின்—அறிவுரைக் கேட்டும்
அலட்சியம் செய்தே அலைந்து திரிந்தோம். (துன்யா)

ஏட்டிக்குப் போட்டி

டி. எப். ஆர். மஆலி சாஹிப் (பாகவி)

முன்னுரை

பண்டைகாலத்து மன்னர்கள், ஆலிம்-அறிஞர்-புலவர்களிடமும் அபிமானம் உடையவர்களாக இருந்து வந்தனர். மன்னர் அரசாங்க அலுவல்களைக் கவனித்துப் பராமரித்த நேரம் போக, மற்ற நேரங்களில் சமயம் ஒதுக்கிக்கொண்டு, தனிப்பட்ட சபையொன்று ஏற்படுத்தி ஆலிம்-அறிஞர்-புலவர்களுடன் நேரத்தை நல்ல முறையில் போக்குவதும் உண்டு. அங்ஙனம் அரசரின் கலைச் சபையில், அங்கம் வகிக்கும் ஆலிம்-அறிஞர்-புலவர்களுக்கு உம்பளமும் சம்பளமும் சன்மானமும் அளித்து ஆதரிப்பார்.

சில மன்னர்கள் அகங்காரம் பிடித்தவர்களாக இருந்து வந்தனர். ஆலிம்-அறிஞர்-புலவர்களை இம் மன்னர்கள், கேவலமாய்க் கருதுவர். தம்மைத் தேடிவரும் புலவர்களை அவமானப்படுத்தி அடித்துத் துரத்தியும் விடுவர். இதில் ஒரு பெருமை அப்பேதை மன்னர்களுக்கு. பாரசீகத்தில் வாழ்ந்தொழிந்த அப்படிப்பட்ட மன்னரின் ஒரு கதையே பின்வரும் வரலாற்றில் சித்தரிக்கப் பட்டிருக்கிறது.

கதை

பாரசீக தேசத்தில் பண்டை காலத்தில் 'கீபர்தார்' என்றொரு மன்னன் இருந்துவந்தான். இவன் வீர பராக்கிரமமும் புஜ பலமும் உடையவன். பல தேசங்களைப் படை யெடுத்துப் பிடித்து ஆண்டவன். ஆனல் முரட்டு குணமும், குரோத சுபாவமும் உடையவன். ஆலிம்-உலமா-அறிஞர்-புலவர்களிடம் இவனுக்குக் கொஞ்சங்கூட அனுதாபம் கிடையாது. யாருக்கும் சன்மானம் கொடுத்து ஆதரிக்க மாட்டான். தன் கீர்த்திப் பிரதாபத்தைக் கேள்விப்பட்டு, தன்னைத் தேடிவந்து, தன் கலைத் திறமையைக் காட்டி ஏதேனும் சன்மானம் பெற்றுச் செல்லலாமென்று அணுகி வரும் புலவர்-அறிஞர்களை, இடக்கு முடக்கான கேள்விகள் கேட்டு, அல்லது ஓயாமல் எதையேனும் சொல்லிக் கொண்டிருக்கச் செய்வான். அறிஞர்கள் கூறும் இனிய கவிதைகளைக் காது கொடுத்துக் கேட்காமல், இறுதியில் "இவ்வளவுதானு உன் திறமை; நீ கெட்ட

கேட்டுக்கு சன்மானம் வேண்டுமா?" என்று சொல்லி விரட்டித் துரத்தி விடுவான்.

இவ்வாறு கிபர்தார் மன்னனிடம் வந்து அவமானப்பட்டு போனவர்கள் எத்தனையோ பேர். பாபம், அவர்கள் நல்லவர்களாய் இருந்ததால், மனம் நொந்துப் பேசாமல் போய்விடுவார்கள்.

இந்தச் சமாசாரம், 'குலிஸ்தான்'-'போஸ்தான்' முதலிய அரிய பாரசீக இலக்கிய நூல்களை இயற்றி உலகமெங்கும் பிரக்யாதி பெற்ற மாபெரும் ஆத்மஞானியும் புலவருமாகிய ஷெய்க் முஸ்லிஹுத்தீன் ஸஅதி ஷீராஜி (ரஹ்) என்னும் மகானுக்குத் தெரிய வந்தது.

இந்த ஷெய்க் ஸஅதி அவர்கள் உலகம் துறந்த ஞானிபோல் வாழ்ந்து வந்தனர். நேர்மைத் தவறும் எந்த மன்னனுக்கும் கொடுங்கோலனுக்கும் அஞ்ச மாட்டார். எப்பேர்ப் பட்டவராயினும் வாக்கு வாதம் செய்து தோற்கடித்து விடுவார்

கிபர்தார் என்ற மன்னன், ஆலிம்-புலவர்களை அழைத்து அவமானப் படுத்தி அனுப்பி விடுகிறுன் என்பதைக் கேள்விப்பட்ட ஷேக் ஸஅதி, அந்த மன்னனிடம் போய் அவனை அவமானப் படுத்திவிட வேண்டும் என்று புறப்பட்டுப் போனுர்.

பாரசீகப் புலவரான ஷேக் ஸஅதி ஷிராஜி, மன்னரைப் பார்த்து பேசி பரிசு பெற்றுப் போவதற்காக வந்திருப்பதாக அரசர் அவைக்குத் தகவல் அனுப்பினுர். அரசர் புலவர் ஸஅதியை உள்ளே அழைத்தார் ஷேக் ஸஅதிப் புலவர் ஆடம்பரமின்றி இருப்பதைக் கண்ட கிபர்தார் மன்னர், இவரை ஒரு சொற்ப நேரத்தில் ஏமாற்றி அனுப்பி விடலாம் என்று எண்ணினுன்.

மன்னன், புலவர் ஸஅதிக்குத் தன் அருகில் ஆசனம் கொடுத்து அமரச் செய்தான். "பாட்டிலேயே ஒரு கதை புனைந்துச் சொல்லுங்கள்; ஆனுல் அந்தக் கதை நான் போதும் என்று சொல்லும் வரை முடிந்துவிடக் கூடாது. அப்படி முடிந்து விட்டால் உம்மை விரட்டித் துரத்தி விடுவேன்" என்று முதலிலேயே மன்னன் நிபந்தனை விதித்து விட்டான்.

எத்தனை மன்னுதி மன்னர்களை யெல்லாம் கண்டனுபவித்து கைக்குள் அடக்கி வரும் ஷெய்க் ஸஅதி (ரஹ்) அவர்களுக்கு அகங்காரம் பிடித்த இந்த கிபர்தார் மன்னன் எம்மாத்திரம். "அரசே அப்படியே ஆகட்டும், ஒரு கதை பாடிச் சொல்லுகிறேன்" என்று ஆரம்பித்தார். அவர் பாட்டாகச் சொன்னதன் கருத்துரை யாவது :—

ஓர் ஊரில் ஒரு மன்னன் இருந்தான். அவனது அரண்மனைப் பக்கத்தில் பெரியதொரு ஆலமரம் இருந்தது. அந்த மரத்தில் பட்சிகள் வந்து உட்கார்ந்து பாடிக் கொண்டிருக்கும். இந்தப் புள்ளினங்களின் இனிய கூச்சல், அந்தப் பேதை மன்னனுக்குப் பிடிப்பதில்லை. இதென்ன பெரிய தொல்லையாய் போய்விட்டதே என்று அடிக்கடி சப்தம்போட்டு பட்சிகளை விரட்டித் துரத்திக்

கொண்டிருப்பான். பிறகும் பட்சிகள் அந்த மரத்தில் வந்து அமர்ந்து பாடிக் கொண்டிருக்கும்.

அந்த ராஜன் அப்பட்சிகளை யெல்லாம் ஒரே அடியாய் பிடித்துத் தொலைத்து விடுவதற்கு ஓர் உபாயஞ் செய்தான். அதாவது, அந்த ஆலமரம் எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவு பெரிய வலை ஒன்றைத் தயார் செய்யும்படி காரியஸ்தருக்குக் கட்டளையிட்டான். அப்படியே மாபெரும் விசாலமான வலை தயார் செய்யப்பட்டது. பட்சிகளெல்லாம் வழக்கமாக வந்து மரக்கிளைகளில் கூடி உட்கார்ந்து காச்சு-மூச்சு என்று கத்திப் பாடிக் கொண்டிருந்தது. அரசன் முன்னேற்பாடு செய்து வைத்திருந்த பிரகாரம், பெரிய வலையை ஒரே வீச்சாக மரம் முழுதும் போர்த்தும்படி பேட்டு எல்லா பட்சிகளும் வலையில் சிக்கும்படியாகச் செய்து விட்டான்.

எனினும் ஆண்டவனுடைய காட்டம் வேறு விதமாக இருந்தது. அந்தப் பெரிய வலையில் மத்தியில் ஒரு ஓட்டை இருந்தது. வலையில் சிக்கிய ஆயிரக் கணக்கான பட்சிகளில் ஒரு பட்சி "புர்ர்" என்று சிறகடித்து தப்பிப் பறந்துபோய் விட்டது........." என்று ஷெய்க் ஸஅதிப் புலவர் கதையைச் சொல்லி நிறுத்தினார்.

கர்வம் பிடித்த மன்னன் அவரை வாயடக்கித் தோல்வியடையச் செய்து துரத்தி விடுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது என்று எண்ணி "புலவர் ஸஅதி அவர்களே அதன் பிறகு என்ன ஆயிற்று! அதற்கு மேல் உமது கதை ஓடவில்லையா?" என்று அகந்தையுடன் கேட்டான்.

அதற்கு ஸஅதிப் புலவர், "மன்னரே இப்போதுதானே கதை சுவாரஸ்யமாய் ஆரம்பமாய் இருக்கிறது. சொல்லுவதற்குத்தானே தயாராகிக் கொண்டிருக்கிறேன்" என்றார்.

"சரி, அப்புறம் என்ன ஆயிற்று" என்று மன்னன் கேட்டான்.

"புர்ர், என்று இரண்டாவது பட்சியும் பறந்தோடி விட்டது"

"சரி, அப்புறம் என்ன ஆயிற்று"

"புர்ர், என்று மூன்றாவது பட்சியும் பறந்தோடி விட்டது"

"சரி, அப்புறம் என்ன ஆயிற்று?"

"புர்ர், என்று நான்காவது பட்சியும் பறந்தோடி விட்டது"

"சரி, அப்புறம் என்ன?"

"புர்ர்—ஐந்தாவது பட்சி"

"அப்புறம்?"

"புர்ர்—ஆறாவது பட்சி"

"......................."

"அப்புறம்?"

"புர்ர், என்று ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்திரண்டாம் பட்சியும் பறந்தோடியது"

"அப்புறம்?"

"புர்ர், என்று ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபத்து மூன்றும்.........."

"........................"

மன்னன் கிபர்தார் சோர்ந்து விட்டான். இரவு வெகு நேரமாய் விட்டது. அவனுக்குப் பசி யெடுக்கவும் தொடங்கியது.

"புலவரே, கதையைச் சீக்கிரம் முடித்து விடுங்கள், நான் தூங்கப் போகவேண்டும்" என்று மன்னன் கேட்டான்.

அதற்கு புலவர் ஸஅதி "கதை இன்னும் பாதிகூட ஆக வில்லை. அவ்வளவு பெரிய மரத்தில், விசாலமான வலையில் அகப் பட்ட பட்சிகளில் இன்னும் பாதிகூட தப்பிப் போகவில்லை. முழுக் கதையும் சொல்லித்தான் தீருவேன். தாங்கள் சாப்பிடவும் தூங்க வும் போகாமல் கேட்டுத்தான் தீரவேண்டும். அல்லது உமது தோல்வியை ஒப்புக்கொண்டு எனக்கு ஆயிரம் பொன் சன்மானம் கொடுத்தனுப்ப வேண்டும்" என்றார்.

இந்த எட்டிக்குப் போட்டிக்கு என்ன செய்வது? அகங்காரம் பிடித்த மன்னன் தன் தோல்வியை ஒப்புக்கொண்டு, ஹஜ்ரத் ஸஅதி (ரஹ்) அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு நல்ல புத்தி பெற்றான்.

சிறுவர்களே! "வல்லவனுக்கும் ஓர் வல்லவன் வையகத்தில் உண்டு" என்பது இக்கதையினால் விளங்கும் படிப்பினையாகும்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

(முதற் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங் களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்தி களுள் சிலதும் சேர்க்கப்பட்டுள்ளன. 115 பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-00

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்.

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

Edited by M. S. ABDUL KHUDUS.

Published by Hajee M. A. Shahul Hameed & Sons.

Printed at Shahul Hameedia Press, Madras.

நஸ்ஹுல் ஹதீது, வபத்ஹுல் மஜீது

புதிய மூன்றும் பதிப்பு

இவ்வுலகில் இன்ஸானாகப் பிறந்த ஒவ்வொருவரும், சிருஷ்டிக் கர்த்தாவாகிய அல்லாஹு தஆலாவை அறிந்து ஹகீகத்தை உணர்ந்து இபாதத்து செய்ய வேண்டியது அத்தியாவசியக் கடமை. இதற்கு இல்மு, ஒழுக்கம், ஈமான், இஸ்லாம், அமல், ஷரீஅத் முதலிய முஆமலாத்துகளைத் தெரிந்து கொள்ள வேண்டியது முதற்பெரும் கடமையாகும்.

இந்த அரிய பெரிய நூலாகிய "நஸ்ஹுல் ஹதீது வபத்ஹுல் மஜீது" என்பது நமது நபிகள் நாயகம் ரஹ்மத்துல்லில் ஆலமீன் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் திருவாய் மலர்ந்தருளிய ஹதீதுகளென்னும் திருவாக்கியங்களைக் கொண்டும், ஸஹாபாக்கள், ஒலிமார்கள் ஸாலிஹீன்கள் நாதாக்களுடைய நஸீஹத்துகள், ஹிக்காயத்துகள் முதலிய உபதேச உபமேய ஆகமங்களை ஆதாரமாகக் கொண்டும், தீனுல் இஸ்லாத்தின் எல்லா மஸ்அலாக்களையும், விஷயங்களையும் தத்துவங்களையும் எடுத்தோதும் அற்புதமான நூலாகும். இந்த ஒரு கிதாபு மட்டும் கையில் யிருந்து விட்டால் தமிழ் முஸ்லிம்களுக்கு வேறெந்த கிதாபின் தேவையும் இராது. அதாவது இதில் இல்லாத விஷயமே இல்லையென்று சொல்லலாம். இதன் அருமை நேரில் பார்த்தாலே தெரிய வரும்.

இதன் விலை ரூ. 9–60

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

ததன் காரணம், இற்றைக்கால நம்மவரது விழிப்புணர்ச்சியே யாகும். இதுபோன்றே, வரும் ஆண்டுகளிலும் தங்களது ஆதரவை வழங்கிவருவார்களானால், மீனவர் சமுதாயம் தழைக்கப் பாடு படும் வர்த்தனியும் வாழும்; அதனால் நமது சமுதாயத்தின் புகழும் ஓங்கும்.

பத்திரிகையை நடத்துவது—அதிலும் தொடர்ந்து நடத்துவ தென்பது சாமான்யமான காரியமல்ல. மிகப் பெரும் பணியாகும். அன்றியும் சமூகத்திற்கும் நம்முடைய வாழ்வுக் காலத்தில் நம்மால் இயன்ற சிறு சேவையாவது செய்துவைப்போமே என்ற எண்ணமும் இதயத்தே எழுந்ததால், எவ்விதச் சலிப்புமின்றி எதிர் நோக்கிப் பாய்ந்த இடர்ப் பாடுகளையெல்லாம் பொருட்படுத்தாது பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தி வருகின்றனம். எப்பணியும் நிதி (பணம்) யின்றேல் இடையுறாது நடைபெறாது. நங்குலப் பெருமக்கள் காப்பாளர்களாகவும், ஆயுள் உறுப்பினர்களாகவும், ஒருவர்கூட இதுவரையில் சேராமல் இருப்பது மிக வருந்தத்தக்கது. 600 சந்தாக்களுக்கு 200 சந்தா பணம் தான் இதுவரையில் கிடைத்துள்ளன. இவ்வகையில் எப்படி ஒருசமூகப் பத்திரிகை தொடர்ந்து நடத்தமுடியும்? இருப்பினும், இன்னும் நம்பத்திரிகையைப் பற்றி அக்கறை கொள்ளாத ஆயிரமாயிரம் நம் சமூகப் பெருமக்களுள்ளனர். இதற்குக் காரணம், பத்திரிகையைப் பற்றி விரிந்த அளவில் நாம் விளம்பரம் செய்யாததும் ஒன்றாகும். 'சிறுகக் கட்டிப் பெருக வாழ்' என்பது செம்மொழியன்றோ? 'ஒவ்வொரு படியாக ஏறுவோம்' என்ற முறையில் நம் முன்னேற்றம் நடந்து கொண்டிருக்கிறது இனிவரும் ஆண்டில் சற்றே வேகம்—முன்னேறுவதில்-காட்ட முயல்வோமாக. முன்னேற வைக்கும் ஆற்றல் சமூகத்தினரிடமே உள்ளது. முதலாண்டில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தவர்களோடு இன்னும் ஆயிரக் கணக்கான புதிய சந்தாதாரர்கள் சேர்ந்துதவுதல் வேண்டும். பத்திரிகைக்குக் காப்பாளர்களும், நன் கொடையாளர்களும் மிகுதியாகச் சேர்ந்து தமது கொடைத்திறனை நிலை நிறுத்தவேண்டுகிறோம்.

இனி, எழுத்தாளர் பெருமக்களைக் குறித்து ஒரு சில எழுத வேண்டுவது இன்றியமையாததாகின்றது. பத்திரிகையின் குறிக்கோள்களுள் ஒன்று சமூகத்தவர்களின் எழுத்து வன்மையை வளர்ப்பது. இம்முறையில் எல்லோருக்கும் வாய்ப்பளித்தல் வேண்டியதாகின்றது. பத்திரிகையின் சுவை கெடாதிருப்பான் வேண்டி, ஒரு சிலரின் எழுத்தோவியங்களை அவ்வக்கால் வெளியிட வேண்டியதும் அவசியமாகின்றது. ஆர்வத்தின் காரணமாக, சிலர் உணர்ச்சிவயப்பட்டு, எவற்றையெல்லாமோ தெளிவற்ற எழுத்தோவியங்களாக்கி அனுப்பிவிடுகின்றனர். அவற்றையெல்லாம் பத்திரிகையின் புகழ் காக்கச் சீர்செய்து வெளியிடவேண்டிய பொறுப்பும் நம்மதாகின்றது. தம்முடைய எழுத்தோவியம் இடம் பெறவில்லையே என்று கவன்று ஒரு சில வேளைகளில் கன்ன்று காலத்தைப் நோக்காமல், பத்திரிகையில் தரப்பட்டுள்ள கருத்

187256

துறைகளில் கவனத்தைச் செலுத்துதல் பயனுடைத்தாம். சாதாரண நாடகமோ, கதைகளோ யின்றி சமூகத்திற்கு எவ்வகையிலேனும் பயன்படக்கூடிய கருத்துக்களை உள்ளடக்கிய தனித்தன்மைவாய்ந்த எழுத்தோவியங்களை, இனிய, எளியதமிழில், தெளிவான நடையில் வர்த்தனியின் இரண்டு அல்லது மூன்று பக்கங்களுக்குமேல் மிகாதவாறு சமூகத்தவர்கள் எழுதியனுப்புவார்களானல், உறுதியாக வெளியிடுவோம் என்று அறுதியிட்டுக்கூற விழைகின்றனம். சமூகப் பேரறிஞர்கள் சமூக நலன் குறித்து அவ்வப்போது கதை, கட்டுரை, கவிதைகளை எழுதியுதவுதல் வேண்டும். பெண்பாலாரது எழுத்தோவியங்களை யாம் பெரிதும் வேண்டுகின்றோம்.

நமக்குப் பலவகைகளில் பணியாற்றும் பருவதவர்த்தனியைப் பற்றி ஒவ்வொரு மாதமும் ஞாபகப் படுத்திக்கொண்டுதான் வருகின்றோம். அவையாவும் ஏட்டளவில் இருக்கின்றனவே யொழிய வேறில்லை. 2-வது ஆண்டு 13-வது இதழ் ஆரம்பமாகிறது. இதுவரை மூன்றிலொரு பங்குதான் சந்தாத்தொகை வந்துள்ளது சுமார் ரூ 1,200/-க்கு மேல் சந்தா பணம் வரவேண்டிருக்கிறது. இவ்வளவு ரூபாயை வெளியில் விட்டுவிட்டுப் பத்திரிகை வெளிவர வேண்டுமானல் ஏதாவது உற்சாகம் இருக்குமா என்பதைச் சிறிதளவு யோசித்துப் பார்க்கவேண்டும். ஆண்டு ஒன்றுக்கு 3 ரூபாய் அவ்வளவு பிரமாதமான தொகையல்ல, 'மனமிருந்தால் மார்க்கமுண்டு'. பர்வதவர்த்தனி தாராளமாய் வெளிவர வேண்டுமானல் அதன் சந்தாத் தொகையை உடனடியாக அனுப்பிவிட வேண்டியது தலையாய கடனாகும்'

ஒவ்வொருவருக்கும் தனித்தனியே தபால் அனுப்புவதோ அல்லது பத்திரிகையில் வெளியிடுவதோ அவ்வளவு சிறந்ததாகத் தோன்றவில்லை. அப்படியும் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் வருமானல் யாம் என்ன செய்ய முடியும்?

நிற்க, சென்றமுறை பர்வதவர்த்தனி வெளி வந்தபோது கட்டுரைகளும், கதைகளும் எழுதி உதவிய பல அன்பர்களும் அறிஞர்களும் இம்முறை அடியோடு புறக்கணித்து விட்டதாகத் தோன்றுகிறது. ஒருசிலருக்குத் தபால் எழுதியும்கூட அவர்கள் எந்த விதமான பதிலும் அனுப்பவில்லை. சமூகத்தின் உயர்வுக்காக சமூக மக்களால் சமூக ஆதரவு கொண்டு நடந்து வரும் இதற்கு யாவரும் தங்களாலான ஒத்துழைப்பைத் தரவேண்டியது மிகவும் முக்கியம் என்பதைத் தாங்கள் அறியாததல்ல.

ஆகையால் பெரியோர்களே! வாலிபர்களே! அன்பர்களே! இனியாவது முன்னேற்றப் பாதையில் நாம் செல்வதற்கு எந்தெந்த வகைகளில் தாங்கள் உதவி செய்ய முடியுமோ அவைகளில் எந்த விதமான லோபத்துவமும் இல்லாமல் வழிகாட்டி யுதவ வேண்டுமாறு கேட்டுக்கொள்ளுகின்றனம். பர்வதவர்த்தனிக்குச்

32
00211, N56SP

தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்.

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக் குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர்ஆனின் **தப்ஸீரை தமிழ் பாஷையில் ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோ பிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

முதல் பாகம்: ஸூறத்து பாத்திஹா—பகருவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸூ வரை விலை ரூ. 10

இரண்டாம் பாகம்: ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

மூன்றாம் பாகம்: ஸூறே யூனுஸ் முதல் ஸூறத்துந் நஹ்ல் முடிய 7-ஸூறுக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

நான்காம் பாகம்: ஸூரத்துல் இஸ்ராஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

ஐந்தாம் பாகம்: ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

ஆறும் பாகம்: ஸூறத்து ஸாப்பாத் முதல் ஸூறத்து ஹுஜ்ராத் முடிய 13-ஸூராக்கள். விலை ரூ 12

ஏழாம் பாகம்: சூறே காப் முதல் ஸூறத்து நாஸ் வரை 65-ஸூறுக்கள் விலை ரூ. 16

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5